வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

05.02.2021 வெள்ளிக்கிழமை




## எழுவர் விடுதலை ஜனாதிபதிக்கே முழு அதிகாரம்!

**தமிழக ஆளுநர்**

சென்னை,பெப்.05

பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேர் விடுதலையில் ஜனாதிபதிக்கே அதிகாரம் உள்ளது என்று தமிழ்நாடு ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலுள்ள பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும் விடுதலை செய்வது தொடர்பாக ஆளுநர் முடிவெடுப்பார் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்திருந்தது. 02

# சுதந்திர நாளில் போராட்டங்களால் நேற்று அதிர்ந்தது வடக்கு-கிழக்கு

## தமிழர்களும் முஸ்லிம்களும் இணைவு



யாழ்ப்பாணம், பெப்ரவரி 05

நாட்டின் 73ஆவது சுதந்திர தினம் தென்னிலங்கையில் சிறப்பாக கொண்டாடப்பட்ட அதேசமயம், சிறுபான்மையினர் அதிகம் வாழும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கரிநாளாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால், நேற்றைய தினம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் போராட்டங்களால் அதிர்ந்தன. சிறுபான்மை இனங்களான தமிழர், முஸ்லிம்களின் உரிமைகளை வலியுறுத்தி 02



04

நீதிமன்றத் தடையை மீறி கிளிநொச்சியில் பேரணி!



07

ஐ.நா. அமைதிப்படையில் இருந்து இலங்கை படைகளை நிறுத்துக!



08

பிரிவினைவாதம் தலைதூக்க நான் இடமளிக்க மாட்டேன்




10

கறுப்புப் பட்டியுடன் யாழில் போராட்டம்

# தமிழரின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதே இலங்கையின் சொந்த நலனுக்கு உகந்தது!



## இந்திய மேலவையில் அமைச்சர் ஜெய்சங்கர்

புதுடில்லி, பெப்ரவரி 05

**ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவத்துக்கும் நீதிக்கும் சமாதானத்துக்குமான தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை கௌரவமான முறையில் பூர்த்தி செய்ய வேண்டும். இதுவே, இலங்கையின் சொந்த நலனுக்கு உகந்தது.**

**இவ்வாறு இந்திய பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.** 02

## மலையக மக்கள் முன்னணி தமிழர் பேரணிக்கு ஆதரவு

ஹற்றன்,பெப்.05

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான உரிமைப் போராட்டத்துக்கு மலையக மக்கள் முன்னணியும் முழு ஆதரவை வழங்குகிறது என முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான பாராளுமன்ற உறுப்பினர் வீ.இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நேற்று 02



## எங்களைத் தனியாக பிரித்தாள முடியாது!

### நடைபவனி அதை காட்டுகிறது என்கிறார் சுமந்திரன் எம்.பி.

மட்டக்களப்பு, பெப். 5

பெரும்பான்மை இனத்தைச் சேராதவர்கள் என்ற ஒரு காரணத்திற்காக எங்கள் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட பேரினவாதத்திற்கு எதிராக நாங்கள் ஒன்று சேர்ந்து திரண்டு நின்றால் மட்டும்தான் முகம் கொடுக்க முடியும் என ஜனாதிபதி சட்டத் 02

## பௌத்த போதனைகளின்படியே நான் நாட்டை நிர்வகிக்கின்றேன்

**சுதந்திரதின உரையில் ஜனாதிபதி சுட்டிக்காட்டு**

கொழும்பு,பெப்.05

நான் ஒரு சிங்கள பௌத்த தலைவர். அதை வெளிப்படுத்த நான் ஒருபோதும் தயங்கமாட்டேன். பௌத்த போதனைகளின்படியே நான் இந்த நாட்டை நிர்வகிக்கிறேன். அனைத்து சமயங்களுக்கும் அனைத்து இனங்களுக்கும் உரிய கௌரவத்தை அளிக்கும் அஹிம்சையும் அமைதியும் கொண்ட பௌத்த தத்துவத்தில், எமது நாட்டில் உள்ள அனைத்து மதங்களுக்கும் அனைத்து இனங்களுக்கும் நாட்டில் நடைமுறையில் 02



## போராட்டம் நசுக்கப்படுவதால் நாம் ஓய்ந்துவிடப் போவதில்லை

### யாழ்.மேயர் மணிவண்ணன் உறுதி

கிளிநொச்சி,பெப்.05

இலங்கையில் தமிழர் போராட்டம் நசுக்கப்படுகின்ற காரணத்தால் ஓய்ந்துவிடப் போவதில்லை என யாழ். மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் ஏற்பாடு 02

## வடக்கில் 8 பேருக்கு கொரோனா தொற்று

யாழ்ப்பாணம்,பெப்.05

யாழ்.போதனா வைத்திய சாலை மற்றும் யாழ்.பல்கலைக் கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 661 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டது.

இதில் வடக்கு மாகாணத்தில் 8 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய் 02

## 704 பேருக்கு நேற்று கொரோனா

கொழும்பு,பெப்.05

இலங்கையில் மேலும் 349 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் ஏற்கனவே கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி நேற்று மாத்திரம் 704 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எ)

## சுதந்திர நாளில்....

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடைபயண போராட்டத்தை பிரதானமாகக் கொண்டு அதற்கு வலுச் சேர்க்கும் விதமாக பல இடங்களிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதேபோன்று, தமக்கு நீதி கேட்டு போராடி வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வடக்கு - கிழக்கின் மாவட்டங்கள் தோறும் போராட்டங்களை முன்னெடுத்தனர். இந்தப் போராட்டங்களை முன்னெடுக்க நீதிமன்றங்கள் மூலம் தடை உத்தரவுகளை பொலிஸார் பெற்றனர். ஆனால், அந்தத் தடைகளையும் பொருட்படுத்தாமல் தமிழ் மக்கள் சுதந்திர தின நாளை கரிநாளாக மாற்றும் விதமாக கறுப்பு உடைகள் அணிந்து போராட்டங்களை முன்னெடுத்தனர்.

**மட்டு. - திருமலை**

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை போராட்டம் நேற்று முன்தினம் மட்டக்களப்பு வந்தடைந்தது. நேற்றைய தினம் இந்தப் போராட்டம் தொடர்ந்து நகர்ந்தது. முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் காத்தான்குடி உள்ளிட்ட முக்கிய பகுதிகள் ஊடாக திருகோணமலையை நோக்கி நகர ஆரம்பித்தது. போராட்டக்காரர்களுக்கு முஸ்லிம் மக்கள் பேராதரவு வழங்கினர். மட்டக்களப்பு நகரத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து பெரு வரவேற்பை அளித்தார்கள். தொடர்ந்து இந்தப் போராட்டம் திருகோணமலையை அடைந்தது.

இதேசமயம், திருகோணமலை மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர். அலஸ் தோட்டம் இறை இரக்க ஆலயம் முன்பாக இந்தப் போராட்டம் ஆரம்பமானது.

**வவுனியா**

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நீதிமன்றத் தடையையும் மீறி நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போரின் போது இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட உறவுகள் எங்கே, அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்று கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 73 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தாலும், தமிழினம் இன்னமும் சுதந்திரம் பெறவில்லை என்று போராட்டக்காரர்கள் குரல் எழுப்பினர்.

**முல்லைத்தீவு**

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாயில் கவனவீர்ப்ப ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

**கிளிநொச்சி**

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் நீதி கோரிய போராட்டம் கிளிநொச்சியிலும் இடம்பெற்றது. நீதிமன்ற தடையையும் மீறி எழுச்சி பேரணியாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதேவேளை, விடுதலைப் புலிகளுக்கு உதவினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் நான்காவது நாளாகவும் கந்தசுவாமி கோயில் முன்பாக இடம்பெற்றது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் முன்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கறுப்பு பட்டி அணிந்து போராட்டங்களில் ஈடுபட்டனர். இதேவேளை, யாழ். பல்கலைக்கழகத்தில் 04.02.2021 கரிநாள் என்று பிரகடனப்படுத்தி பதாதை கட்டப்பட்டது. (ஐ)

## மலையக...

வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு, சம்பள உயர்வுக்கான உரிமைப் போராட்டம் மற்றும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையில்நடைபெறும்பேரணி தொடர்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்குமாறு வலியுறுத்தி இன்று மலையகம் தழுவிய ரீதியில் நடைபெறும் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு மலையக தொழிலாளர் முன்னணி ஏற்கனவே தமது ஆதரவை வெளியிட்டுள்ளது.

தொழிலாளர்கள் மத்தியில் பிளவு ஏற்படாமல் உழைக்கும் மக்களின் பலத்தை ஓரணியில் திரண்டு காட்ட வேண்டும் என்பதற்காகவே நாம் இந்த முடிவை எடுத்தோம்.

ஆயிரம் ரூபாய் சம்பளம் மட்டுமல்லாது, கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்க வேண்டிய தொழில் உரிமைகள் மற்றும் சலுகைகளும் முழுமையாகக் கிடைக்க வேண்டும். இதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகன எமது அழுத்தம் தொடரும்.

சம்பள உரிமைக்கான போராட்டத்தை நடத்துவதற்கு மலையகத் தொழிலாளர் முன்னணி திட்டமிட்டிருந்த வேளையிலேயே, ஏனைய தரப்பும் அழைப்பு விடுத்துள்ளது. அந்தவகையில் ஊழியர்களுக்காக இணைந்து போராடி, தொழில் உரிமைகளை வென்றெடுப்பதற்கு முழு ஆதரவையும் நாம் வழங்குவோம்.

இதேவேளை வடக்கு- கிழக்கில் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான உரிமைப் போராட்டத்துக்கும் மலையக மக்கள் முன்னணி முழு ஆதரவை வழங்குகின்றது. இது தொடர்பாக மாவை சேனாதிராசாவுடன் கலந்துரையாடினோம். அவர்களும் எமது சம்பள உயர்வுப் போராட்டத்துக்கு ஆதரவை வழங்கியுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் இன்று காணிகள் அபகரிக்கப்படுகின்றன. தொல்லியல் ஆய்வு என்ற போர்வையில் ஆக்கிரமிப்புக்கள் நடைபெறுகின்றன. இவை நிறுத்தப்படவேண்டும். அதற்காக தமிழ்க் கட்சிகள் முன்னெடுக்கும் நடவடிக்கைக்கும் ஒத்துழைப்பு வழங்குவோம்- என்று குறிப்பிட்டுள்ளார்.(அ-எ)

## தமிழரின்...

நேற்றைய தினம் இந்திய பாராளுமன்றின் மேலவையில் (ராஜ்ய சபா) கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த மாதம் கொழும்பில் உயர் மட்ட தலைவர்களுடன் உரையாடிய போது நல்லிணக்க செயல்முறைக்கு இந்தியாவின் ஆதரவை மீண்டும் வலியுறுத்துவதாக வலியுறுத்துகிறார் என்று தெரிவித்தார் என்றும் கூறினார்.

மேலும், ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவம், நீதி, சமாதானம் மற்றும் கௌரவம் ஆகிய தமிழ் மக்களின் எதிர்ப்பார்ப்புகள் பூர்த்தி செய்யப்படுமானால், அது, 13ஆவது திருத்தம் உள்பட அர்த்தமுள்ள ஓர் அதிகார பரவலாக்கலுக்காக இலங்கை அரசு அளித்த உத்தரவாதத்தை செயல்படுத்துவதாக அமையும்.

1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசை இந்தியா வற்புறுத்தி வருகிறது.

எனது அண்மைய விஜயத்தின்போது (ஜனவரி 5 - 7) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தினேஷ் குணவர்த்தன ஆகியோருடனான சந்திப்பில் இது தொடர்பில் கலந்துரையாடினேன். இலங்கையில் நல்லிணக்க செயல்முறைக்கு இந்தியாவின் ஆதரவு நீண்ட காலமாக உள்ளது என்பதை நான் மீண்டும் அவர்களிடம் வலியுறுத்தினேன்.

தமிழர்களின் நலனைப் பாதுகாப்பது தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கான உறுதிப்பாட்டை நிறைவேற்ற அனைத்து மட்டங்களிலும் இந்தியா இலங்கைக்கு தொடர்ந்து அழைப்பு விடுத்துள்ளது என்றும் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

காலதாமதமாகும் இந்த இன நல்லிணக்க நடவடிகைகள் இன சௌயன்யத்துக்கு மிகவும் அவசியம் என்பதை வற்புறுத்தினேன்.

இந்தியா தொடர்ந்தும் இதில் அக்கறை கொள்ளும் என்றும் தெரிவித்தேன்.

மேலும், கடந்த செப்ரெம்பரில் இந்திய பிரதமர் நரேந்திரமோடி, இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையிலான காணொலி மூலமான பேச்சின்போதும் இந்திப் பிரச்னை தொடர்பில் பேசப்பட்டது என்றும் ஜெய்சங்கர் தெரிவித்தார். (ஐ)

## எங்களை...

தரணியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் தெரிவித்தார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான நீதிகோரும் மாபெரும் கவனயீர்ப்பு பேரணி மட்டக்களப்பு தாளங்குடா நகரில் இருந்து ஆரம்பித்து ஓட்டமாவடி நகரை அடைந்த நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

பேராண்மை ஆட்சி, எங்களை அடக்குகின்ற ஆட்சி, எங்களுக்கு சுதந்திரம் இல்லாமல் அடக்கி ஒடுக்கி ஆட்சி செய்கின்ற முறையை எதிர்த்து பல விடயங்களை முன்வைத்துள்ளோம். அனைத்து இடங்களிலும் எங்களோடு மக்கள் இணைந்து போராடுகின்றார்கள்.

முஸ்லிம்களின் பிரச்னையாகவுள்ள ஜனாசா எரிப்பு விவகாரத்தினையும் நாங்கள் முன்னெடுத்துள்ளோம். தமிழ் மக்களின் நீண்டகால பிரச்னைகள், எங்களது அரசியல் கைதிகள் விடுதலை, காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி செய்யப்பட வேண்டும். எங்களது நிலங்கள் அபகரிப்பு நிறுத்தப்படவேண்டும். வழிபாட்டுத் தலங்கள் உடைக்கப்படுகின்றன. அவை நிறுத்தப்பட வேண்டும்.

மலையக மக்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்குவோம் என்று சொல்லிச் சொல்லி இழுத்தடிப்பு செய்கின்றார்கள். அது கொடுக்கப்படவேண்டும். நாங்கள் பெரும்பான்மை இனத்தை சேராதவர்கள் என்ற ஒரு காரணத்திற்காக எங்கள் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்தப்பட்டுள்ள பேரினவாதத்திற்கு எதிராக நாங்கள் ஒன்று சேர்ந்து திரண்டு நின்றால் மட்டும்தான் முகம் கொடுக்க முடியும்.

இதுவரைக்கும் எங்களை தனித் தனியாக கையாண்டார்கள். எங்களை தனித் தனியாக பிரித்தாள முடியாது என்ற செய்தியை இந்த நடைபயணத்தின் மூலமாக சொல்கின்றோம். அதனை தொடர்ந்து நீடிக்க வைக்கவேண்டும். ஒருவொருக்கு ஒருவர் உதவியாக தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் பெரும்பான்மை இனத்தை சேராதவர்கள் சிறுபான்மை இனத்தவர்களல்ல. நாங்கள் எண்ணிக்கையில் குறைவானவர்கள்.

நாங்களும் ஒரு மக்கள் எங்களுக்கும் ஒரு கலாசாரம் உள்ளது. எங்களுக்கு ஒரு மொழி இருக்கின்றது. அடையாளம், சமயம் இருக்கின்றது. இவற்றை பாதுகாக்கும் சம பிரஜைகளாக நாட்டில் வாழ்வதற்கான உரிமையை கேட்டு நாங்கள் இந்த நடை பவணியை நடாத்துகின்றோம். அனைவரும் சேர்ந்து எங்களோடு வரவேண்டும்-என்றார்.

## பௌத்த...

உள்ள சட்ட கட்டமைப்பிற்குள் சரி சமமாக சுதந்திரத்தை அனுபவிக்கும் உரிமை உண்டு என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(ஜனாதிபதியின் சுதந்திர தின உரை 8ஆம்,9ஆம் பக்கங்களில்)

## வடக்கில் 8...

யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு பேருக்கும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இருவருக்கும் இவ்வாறு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (அ-எ)

## எழுவர் விடுதலை...

இந்நிலையில், சட்டங்களுக்கு உள்பட்டு விடுதலை குறித்து குடியரசுத் தலைவரே முடிவெடுப்பார் என்று

ஆளுநர் தரப்பில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வழக்கு எதிர்வரும் பெப்ரவரி 9ஆம் திகதி உச்சநீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. (ஐ)

(முன்னர் வந்த செய்தி பக்கம் 12இல்)

## போராட்டம்...

செய்யப்பட்ட போராட்டத்தில் நேற்று கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

நீதி கிடைக்கும் வரை தமிழர் போராட்டம் எங்கும் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கும். இந்த செய்தியை இலங்கை அரசாங்கத்துக்கும், சர்வதேசத்துக்கும் தெளிவாகத் தெரிவிக்கின்றோம்.

புலம்பெயர் தேசங்களிலும் வடக்கு - கிழக்கிலும் தமிழ் மக்கள் உரிமைகளை வென்றெடுக்க போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்- என்றார். (அ-எ)

## பூரணத்துவமற்ற...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

தசாப்த காலத்தில் கடந்த நான்கு தசாப்த காலம் வடக்கு - கிழக்கு மக்களைப் பொறுத்த வரை அடக்குமுறைகளின் உச்சக்கட்டமாக அமைந்திருந்தது. அடிப்படை மனித உரிமைகள் மிக அப்பட்டமான முறையில் கடந்த நான்கு தசாப்த காலத்தில் மீறப்பட்டுள்ளதையே ஜெனிவா மனித உரிமைப் பேரவை வரையிலான இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகள் எதிரொலிக்கின்றன.

ஒன்றுபட்ட இலங்கை என்ற தொனிப் பொருளில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இத்தடவை சுதந்திர தினத்தை நடத்தியிருந்தார். ஆனால், உதட்டளவில்தான் ஒற்றுமை காணப்படுகின்றதே தவிர, அண்மையில் தனது குடியரசு தினத்தைக் கொண்டாடிய இந்தியா, மாநில வாரியாக தனது நாட்டிலுள்ள ஒவ்வோர் இனங்களின் தனித்துவங்களை பேணிப்பாதுகாப்பது போல, இலங்கை ஒரு சிறிய நாடாக மூவின மக்களை மட்டுமே கொண்டுள்ள போதிலும், இன அந்நியோன்யத்தை பேண முடியாதிருக்கின்றது. இந்நிலையிலேயே இலங்கையின் அர்த்தமற்ற சுதந்திரம் தனது 73ஆவது ஆண்டை பூர்த்தி செய்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஈழநாடு
Eelanadu
05.02.2021 வெள்ளிக்கிழமை
சார்வரி, தை 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# மீண்டும் முஸ்லிம் மக்கள்

'பொத்துவிலிருந்து பொலிகண்டிவரையில்' என்னும் சுலோகத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் ஜனநாயக போராட்டத்தில், முஸ்லிம் மக்களும் பங்குகொண்டிருக்கின்றனர். கடந்த காலங்களிலும் இது போன்ற பல எதிர்ப்பு நடவடிக்கைகளை தமிழர் தரப்புக்கள் மேற்கொண்டிருக்கின்றனர். ஆனால், அப்போதெல்லாம் முஸ்லிம் அரசியல்வாதிகள் முஸ்லிம்களை தமிழரிலிருந்து விலக்கி வைப்பதிலேயே முழுமூச்சாக கவனம் செலுத்தியிருக்கின்றனர். அதேவேளை, தமிழர் எதிர்ப்பு அரசியலை எதிர்ப்பதிலும் முழுமுச்சாக செயல்பட்டு வந்திருக்கின்றனர். ஆனால், அண்மைக்காலமாக, இந்த நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. குறிப்பாக ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னரான அரசியல் சூழல், முஸ்லிம் அரசியல் தலைமைகளை பெரியளவில் பாதித்திருக்கின்றது. முஸ்லிம் சிவில் சமூக பரப்பு எப்போதுமில்லாதவாறு அச்சத்தால் உறைந்துபோயிருக்கின்றது.

ஆயுதப் போராட்டம் இடம்பெற்ற காலத்தில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் எவ்வாறு செயல்பட்டன என்பதை அனைவரும் அறிவர். யுத்தச் சூழலை மிவும் கச்சிதமாக பயன்படுத்திக் கொண்டு, சமூக மற்றும் பொருளாதார ரீதியில் முஸ்லிம்கள் பெரியளவில் வளர்ச்சியடைந்தனர். குறிப்பாக, சிங்கள – பௌத்த தரப்புக்கள் அச்சுறுத்தலாக பார்க்குமளவிற்கு தென்பகுதியில், முஸ்லிம்கள் வர்த்தக ரீதியில் பலமடைந்தனர். மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் முஸ்லிம்கள் இணைந்திருந்தபோதிலும்கூட, முஸ்லிம்கள் தொடர்பான எதிர்ப்புணர்வு சிங்கள வெகுசனப்பரப்பில் பரவலடைந்தது. இவ்வாறானதொரு சூழலில்தான் பொதுபல சேனாவின் உருவாக்கம் நிகழ்ந்தது. பொதுபல சேனாவின் தோற்றம் முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கு ஒரு தெளிவான செய்தியை கொடுத்திருந்தது. திரட்சிபெற்று வந்த முஸ்லிம் எதிர்ப்பிற்கு அணைபோடும் முயற்சியாகவே முஸ்லிம் அரசியல் தலைமைகள் ராஜபக்ஷவிற்கு எதிராக திரும்பினர். ஆட்சி மாற்றத்திற்கு ஆதரவளித்தனர். ஆனால், ஈஸ்டர் தாக்குதல் அனைத்தையும் தலைகீழாக்கியது. முப்பது வருடங்களுக்கும் மேலாக கொழும்பின் அதிகார எல்லைக்குள் சுகமாக இருந்த முஸ்லிம் தலைமைகள், ஒரே நாளில் நடுவீதிக்கு வந்தன. பொதுஜன பெரமுன ஆட்சியாளர்கள் ஒரு விடயத்தில் மிகவும் தெளிவாக இருப்பதாக தெரிகின்றது. அதாவது, சிங்கள பெரும்பான்மையின வாக்கில்தான் நாங்கள் தங்கியிருக்கவேண்டுமேயன்றி, சிறுபான்மை சமூகங்களில் தாங்கள் இருக்கக் கூடாது. ஜனாதிபதியின் சுதந்திரன தின உரையிலும் இந்த விடயம் தெளிவாகவே தெரிகின்றது.

இந்த அரசாங்கத்தின்கீழ் தங்களின் வழமையான அரசியலுக்கு இடமில்லையென்பதை முஸ்லிம்கள் நன்கு உணர்ந்துவிட்டனர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், தமிழ் தலைமைகளின் செயல்பாடுகளுக்கான ஆதரவை வழங்க முயற்சிக்கின்றனர். இதற்கு கூட்டமைப்பின் அண்மைக்கால செயல்பாடுகளும் ஒரு காரணம். அதாவது, கொரோனாவினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்யும் விவகாரத்தில் அரசாங்கம் இறங்கிவரவில்லை. இது தொடர்பில் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கண்டனங்களை தெரிவித்தபோதிலும்கூட, அரசாங்கம் அவற்றை பொருட்படுத்தவில்லை. இது, முஸ்லிம்களை மனரீதியிலும் பெரியளவில் பாதித்திருக்கின்றது. இந்த விடயத்தில் கூட்டமைப்பின் அரசியல் தலைவர்கள் முஸ்லிம்களுக்கு ஆதரவாக குரல்கொடுத்திருந்தனர். இது முஸ்லிம் வெகுசனப் பரப்பிலும் பெரிதும் வரவேற்கப்பட்டது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படும் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் தங்களையும் இணைத்துக் கொள்ளுமளவிற்கு, முஸ்லிம்களும் தங்களை மாற்றியிருக்கின்றனர். எதிர்காலத்திலும் தமிழ் – முஸ்லிம் அரசியல் தலைமைகளும், சிவில் சமூக குழுக்களும் பொதுவான விடயங்களில் இணைந்து நிற்பார்களாயின், நிச்சயம் அது ஆரோக்கியமான ஒன்றுதான்.

# பூரணத்துவமற்ற 73ஆவது சுதந்திர தினம்!

- அலசுவது இராஜதந்திரி -

இலங்கையின் 73ஆவது சுதந்திரதினம் நேற்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது. தென்னிலங்கையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் சுதந்திரதின நிகழ்வுகள் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற அதேசமயம், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சுதந்திரதினம் சிறுபான்மையின மக்களைப்பொறுத்தவரை அர்த்தமற்றதாகுமென்ற வகையில் ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.


கிழக்கின் பொத்துவில் முதல் வடக்கே பொலிகண்டிவரை இடம்பெற்றுவருகின்ற பேரணி, வடக்கு - கிழக்கு மக்களின் யுத்தத்துக் குப் பின்னரான மனிதாபிமானப் பிரச்னைகளையும், கடந்த 73 வருட காலத்தில் ஆங்கிலேயரிடமிருந்து இலங்கை பெற்ற சுதந்திரம் ஒருபக்க சார்பானதாக இருப்பதையும் எடுத்துக்காட்டுக்காட்டுவதாக இருந்தது.

பொத்துவிலிலிருந்து வடக்கே பொலிகண்டிவரை இடம்பெற்று வருகின்ற பேரணியில் முஸ்லிம் மக்களும் கலந்து கொண்டிருந்ததை அவதானிக்கமுடிகின்றது. அண்மைக் காலங்களில் முஸ்லிம் மக்களுக்கெதிரான கெடுபிடிகள் அதிகரித்துள்ளமையே அம்மக்கள் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான பேரணியில் கலந்து கொண்டமைக்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

இலங்கை சுதந்திரமடைந்தபோது தென்னிலங்கையின் முஸ்லிம் பிரமுகர்கள் தேசிய கட்சிகளுடன் இணைந்திருந்த அதே சமயம், வடக்கு - கிழக்கின் முஸ்லிம் பிரமுகர்கள் தமிழ் கட்சிகளிலேயே அங்கம் பெற்றிருந்ததுடன், தமிழ் பேசும் மக்கள் என்ற ஒரே குடையின்கீழ் ஒற்றுமை பேணியிருந்ததை அவதானிக்க முடியும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக எண்பதுகளில் ஆரம்பித்த வடக்கு-கிழக்கின் ஆயுதப்போராட்டம் முஸ்லிம் மக்களையும் பாதித்த நிலையில், தமிழ் , முஸ்லிம் மக்களுக்குமிடையே முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. இந்த முரண்பாட்டை பதவிக்கு வந்த ஆட்சியாளர்களும் தமது அரசியல் ஆதாயத்துக்காக நல்ல முறையில் பயன்படுத்தியிருந்தனர்.

**சேர். பொன்னம்பலம் இராமநாதன்**

ஆங்கிலேயரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றபோது தமிழ் தலைவர்கள் வழங்கிய பங்களிப்பு அபரிமிதமானது. சேர். பொன்னம்பலம் இராமநாதன் ஆங்கிலேயருடன் தமது அரசியல் ஆளுமை மூலமாக நடத்திய ஜனநாயக ரீதியான போராட்டமே இலங்கையின் சுதந்திரத்தை பெரிதும் உறுதி செய்திருந்தது. ஆனால், இலங்கை சுதந்திரம் பெற்று 73 ஆண்டுதள் பூர்த்தியாகியுள்ளபோதிலும் சிறுபான்மையினத்தவரான தமிழ், முஸ்லிம் மக்கள் தமது உரிமைகள் தொடர்பாக ஒரு பூரணத்துவமற்ற சுதந்திரத்தை அனுபவித்து


INDEPENDENCE COMMEMORATION
February 4, 1949
NATIONAL SONGS
In Sinhalese and Tamil to be sung on the occasion of the Inauguration of the Independence Memorial Building at Torrington Square

வருவதையே அவதானிக்க முடிகின்றது.

கல்வி, பொருளாதாரம் என்பவற்றில் ஓரங்கப்பட்டதோடு, அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பாகவும் தற்போது பெரும் நெருக்கடிகளை வடக்கு-கிழக்கு மக்கள் அனுபவித்து வருகின்ற நிலையே ஜெனிவா மனித உரிமைப் பேரவையிலும் கடந்த சிலவருடங்களாக இது பிரதிபலித்துவருவதை அவதானிக்கமுடிகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்து அதன் முதலாவது சுதந்திரதினத்தை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் கொண்டாடியபோது இலங்கையின் தேசிய கீதம் சிங்கள, தமிழ் மொழிகளில் பாடப்பட்டு, இரு இனத்தவர்களது தனித்துவங்களும் மதிக்கப்பட்ட தன்மையே காணப்பட்டிருந்தது. முதலாவது சுதந்திரதினத்துக்கான அழைப்பிதழில்கூட சிங்கள, தமிழ் மொழிகளில் தேசிய கீதம் பாடப்படுவது குறிப்பிடப்பட்டுள்ளது.


சிங்களத்திலோ, தமிழிலோ தேசிய கீதம் தேச ஒற்றுமையைப் பேணி, எவ்வித வேற்றுமையுமின்றி ஒரே அர்த்தத்தைக்கொண்டதாகவே அமைந்திருக்கின்றது. ஆனால் இத்தடவை மட்டுமல்ல. கடந்த ஆண்டிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் தமிழ் தேசிய கீதத்தை புறந்தள்ளியிருந்தது.

ஏழு தசாபக்தகால சுதந்திரம்

இலங்கை சுதந்திரமடைந்து 73 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன. ஆனால், இந்த ஏழு தசாப்த காலத்தில் சிறுபான்மையின மக்களான தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக தொடர்ந்து போராடிவருவதையே அவதானிக்கமுடிகின்றது. அத்துடன், இந்த ஏழு

(15ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

# தொற்றிலிருந்து குணமடைந்தோர் 60 ஆயிரத்து 500ஐ தாண்டியது

கொழும்பு,பெப்.05

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி பூரண குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

நேற்று மேலும் 684 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் 60 ஆயிரத்து 567 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 330 ஐ தாண்டியுள்ளது. (எ)

பெப்ரவரி 5 - வெள்ளிக்கிழமை
சார்வரி வருடம் - தை - 23
நல்ல நேரம் : 9.00 - 10.30
எமகண்டம் : 3.00 - 4.30
திதி : நவமி




05.02.2021

**மேடம்** அதிர்ஷ்டமான நாள். உழைப்போரின் எண்ணம் நிறைவேறும். அலுவலக முன்னேற்றம் வெற்றி பெறும். பகைவர் ஒருவர் மனம் மாறி முன்வந்து நட்பாவார்.

**இடபம்** மேலதிகாரியிடம் பேசி நன்மை அடை வீர்கள். முன்னேற்றத்திற்கு எடுத்த முயற்சி ஓரளவு வெற்றி பெறும். அரசாங்க உதவி தாமதத்துக்குப் பிறகே கிடைக்கும்.

**மிதுனம்** நன்றி மறந்தவர்களை நினைத்து வருந்த வேண்டாம். பழைய கவலைகள் குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள். பிடிவாதமின்றி வளைந்து கொடுத்து போங்கள்.

**கடகம்** அறிமுகமானவர்கள் இப்போது உதவி கேட்பர். நம்பிக்கை இழக்காமல் முயற்சியை தொடர்ந்து வெற்றி. முன்பு வாட்டிய சிரமங்களில் இருந்து விடுபடுவீர்கள்.

**சிம்மம்** பொறுமையிழக்க வேண்டிய தருணங்களில் அமைதி மன நிம்மதி மீளும். விட்டுப்போன தொடர்புகளைப் புதுப்பிப்பீர்கள். பிள்ளைகளின் போக்கில் மகிழ்ச்சி.

**கன்னி** எதையும் அதிக முயற்சிக்குப் பிறகே முடிக்க இயலும் உழைப்புக்கேற்ற வருமானம் இல்லையே என வருந்தாதீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். மகிழ்ச்சி.

**துலாம்** புது முயற்சி தள்ளிப்போனால் அது நன்மைக்கே. தாயாருக்கு நன்மை. பிடிவாத குணம் வேண்டாம். பிள்ளைகளின் வாழ்வு மேம்படுவதைக் கண்டு மகிழ்வீர்கள்.

**விருட்சிகம்** மனதில் நிம்மதி. தெளிவு வரும்.வெளிநாட்டில் உள்ளவர்கள் பெற்றோரைச் சந்திந்து மகிழ்வர். குடும்பத்தினரின் செயலால் மதிப்பு உயரும்.

**தனுசு** பிள்ளைகளின் குறிக்கோள் நிறைவேறி மகிழ உதவுவீர்கள். வீண் பழிகளைத் துடைத்தெறிவீர்கள். எண்ணம் ஈடேறும். கடன் எளிதாக கிடைக்கும்.

**மகரம்** கெட்டபெயர் தவறிப்போயும் வராதபடி கவனமாக இருங்கள். பேசும் வார்த்தைகளால் சிரமம் வேண்டாம். உடல் உழைப்பவர்களுக்கு நன்மை பெருகும்.

**கும்பம்** முன்பு சுலபமாக நிறைவேறிய செயலுக்கும் முயற்சி. தாயாருடன் சச்சரவுகள் வேண்டாம். வாகனம் வாங்குவீர்கள். செலவுகளால் நன்மைகள் ஏற்படும்.

**மீனம்** நன்மையும், லாபமும் வரும். நல்லவர் ஆலோசனை. யாரைப் பற்றியாவது வம்பு பேசினால் பிரச்னை வரும். யாரிடமும் பகை வேண்டாம். இடர்களை சந்திப்பீர்கள்.



# நீதிமன்றத் தடையை மீறி கிளிநொச்சியில் பேரணி!

**கிளிநொச்சி,பெப்.05**

**கிளிநொச்சியில் நீதிமன்றத் தடையையும் மீறி வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அமைப்பால் ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.**



கிளிநொச்சி பழைய வைத்திய சாலை முன்பு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரணி ஏ-9 வீதி வழியாக பழைய மாவட்ட செயலகம் வரை சென்றது. இதன்போது இலங்கை அரசின் கடந்த காலச் செயல்பாடுகளைக் கண்டித்தும், சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. அத்துடன், கறுப்புக் கொடிகள் மற்றும் பதாகைகள் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.



ஆர்ப்பாட்டப் பேரணியில் இணைந்தவர்கள் வாயினை கறுப்புத் துணிகளால் கட்டியிருந்தனர். இந்தப் பேரணியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன், யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நீதிமன்றம் மூலம் பொலிஸாரால் தடை உத்தரவு பெறப்பட்டிருந்தபோதிலும் அதனையும் மீறி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.(எ)

# நாட்டிலிருந்து ஒட்டுமொத்தமாக விரட்டப்படும் நிலையில் தமிழர்

## சுரேஷ் பிறேமச்சந்திரன் கவலை




கிளிநொச்சி,பெப்.05

இந்த நாட்டில் தமிழர்களின் இருப்பு இன்று கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன், வடக்கு கிழக்கு தாயகப் பகுதிகளில் தமிழரின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த நாட்டிலிருந்து தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக விரட்டப்படக் கூடிய ஒரு அபாய சூழல் உருவாகிக் கொண்டிருக்கிறது.

எனவே அரசின் அடக்கு முறைகளைக் கண்டித்து முன்னெடுக்கப்படும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரெழுச்சிப் பேரணியில் அனைவரும் இணைந்துகொள்ள வேண்டும்- என்றார். (எ)

# மூன்று மாத குழந்தைக்கு கொரோனா

ஹற்றன்,பெப்.05

ஹற்றன் - கினிகத்தேன பகுதியில் புதிதாக 14 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதில் 3 மாத குழந்தை ஒன்றும் உள்ளடங்குவதாகவும் தொற்றுக்குள்ளான அனைவரும் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்றும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# பருத்தித்துறையில் அதிகாலைவேளை வீடொன்றை சுற்றிவளைத்த எஸ்.ரி.எவ்.

யாழ்ப்பாணம், பெப். 05

**பருத்தித்துறையில் கஞ்சா போதைப்பொருள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து வீடொன்றை சிறப்பு அதிரடிப் படையினர் சுற்றி வளைத்த நிலையில் ஏற்பட்ட முறுகலில் இரண்டு பொது மகன்களும் சிறப்பு அதிரடி படை உத்தியோகத்தரும் காயமடைந்துள்ளனர்.**

சம்பவத்தில் காயமடைந்த குடும்பத்தலைவர் ஒருவரும் குடும்பப்பெண் ஒருவரும் மந்திகை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வெட்டுக்காயத்துக்கு உள்ளாகிய சிறப்பு அதிரடிப் படை உத்தியோகத்தர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை பருத்தித்துறை, தும்பளை எல்லை வீதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த வீட்டுக்குச் சென்ற சிறப்பு அதிரடிப் படையினர் கஞ்சா போதைப்பொருள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் தேடுதல் நடத்தப்போவதாகக் கோரினர். எனினும் அவ்வாறு கஞ்சா பதுக்கிவைத் திருக்கவில்லை என்று வீட்டின் உரிமையாளர் கூறியுள்ளார்.

அதனையடுத்து சிறப்பு அதிரடிப்படையினருக்கும் அந்தக் குடும்பத்துக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. அதன் போது சிறப்பு அதிரடிப் படையினர் வான் நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

தமது உத்தியோகத்தர் மீது வாளால் வெட்டிய ஒருவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று சிறப்பு அதிரடிப் படையினர் பருத்தித்துறை பொலிஸில் தெரிவித்துள்ளனர். அத்துடன் தமது வாகனத்துக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளனர்.

மேலும் சிறப்பு அதிரடிப் படையினரின் தாக்குதலில் காயங்களுக்குள்ளானதாக குடும்பத்தலைவரும் குடும்பப் பெண் ஒருவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அந்த வீட்டைச் சேர்ந்த இருவரை அழைத்து வந்த பொலிஸார், பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




# யாழ்.பல்கலையில் கரிநாள் பதாதை

யாழ்ப்பாணம், பெப். 05

தடைகளை மீறி யாழ். பல்கலைக்கழகத்தில் இலங்கை சுதந்திர தினம் கரிநாளாக பிரகடனப்படுத்தப்பட்டு பதாதை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்வுரிமையையும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகேட்டும் நாட்டின் 73 ஆவது சுதந்திர நாளான நேற்று கரிநாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பொலிஸாரின் தடைகளை மீறியும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் நிலையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் கரிநாளை பிரகடனப்படுத்தி பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டன.

(அ)

*சுதந்திர தினத்தை முன்னிட்டு*

# மன்னாரிலிருந்து கொழும்புக்கு பாத யாத்திரை ஆரம்பமானது



மன்னார், பெப். 05

இலங்கையின் 73ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று வியாழக்கிழமை காலை மன்னாரில் இருந்து கொழும்புக்கான பாத யாத்திரையை மன்னாரைச் சேர்ந்த “சாக்கு சாமியார்” என அழைக்கப்படும் கிறிஸ்தோப்பர் கிருஸ்ணன் டயஸ் ஆரம்பித்துள்ளார்.

இலங்கை சுதந்திர தினத்தை முன்னிட்டு எம் நாட்டு மக்களிடம் இன மத ஒற்றுமை, மக்கள் மத்தியில் சாந்தி சமாதானம் நிலவவும், குறிப்பாக கொரோனா தொற்று நோயிலிருந்து மக்களை பாதுகாப்பதற்காக தொடர்ச்சியாக தங்களை அர்பணித்து வரும் சுகாதார தரப்பினர், ஜனாதிபதி , பிரதமர் , பாதுகாப்பு படையினர் உற்பட அனைவரும் உடல் உள நலம் வேண்டியும் , இலங்கை சுதந்திர தினத்தை முன்னிட்டும் பாதயாத்திரை மேற்கொள்வதாக அவர் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்திலிருந்து அவர் தனது பாத யாத்திரையை ஆரம்பித்தார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மற்றும் மதத்தலைவர்களின் ஆசியுடன் அவர் தனது பாத யாத்திரையை ஆரம்பித்தார்.

(அ)

# தேசிய பாரம்பரியத்தை அடையாளப்படுத்தும் இடைக்கால அறிக்கை பிரதமரிடம் கையளிப்பு

கொழும்பு,பெப்.05

இலங்கையின் தேசிய பாரம்பரியத்தை தீர்மானிக்கவும், அடையாளம் காணவும் ஒரு வழிமுறையை அறிமுகப்படுத்துவது தொடர்பான இடைக்கால அறிக்கை விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவி டம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

இந்த இடைக்கால அறிக்கைக்கு அமைய முன்வைக்கப்படும் முன்மொழியப்பட்ட வழிமுறைகள் பொதுமக்களின் கருத்து கோரலுக்காக எதிர் வரும் 8ஆம் திகதி நாளிதழ்களில் பகிரங்கமாக வெளியிடப்படவுள்ளது.

தேசிய மரபுரிமை அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் கோரிக்கைக்கு அமைய புத்த சாசன, சமய மற்றும் கலாசார



அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் இலங்கையின் தேசிய பாரம்பரியத்தை தீர்மானிக்கவும் அடையாளம் காணவும் ஒரு வழிமுறையை கொண்டு வருவ தற்கு அமைச்சரவை ஒப்பு தலைப் பெற்றுக்கொண்டார்.

அதற்கமைய தேசிய பாரம்பரியத்தை தீர்மானிக்கவும், அடையாளம் காணவும் உரிய வழிமுறையைத் தயாரிப்பதற்கு 16 நிபுணர்களைக் கொண்ட ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவின் அறிக்கையே நேற்று முன்தினம் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

(எ)

# வனப்பகுதியை அதிகரிக்க முடிவு

கொழும்பு,பெப்.05

15 மாவட்டங்களில் உள்ள 69 காடுகளை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அறிவிக்கும் வர்த்தமானியில் வனப்பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமல வீர திஸநாயக்க கையொப்பமிட்டுள்ளார். இதன் மூலம் வனப்பகுதியை 30 சதவீதமாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வனப் பாதுகாப்பு தொடர்பில் நடைமுறையில் உள்ள சட்டத்தை திருத்தியமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வனமீள் புத்தாக்கம் தொடர்பில் சுபீட்சமான எதிர்காலக் கொள்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைச் செயல்படுத்தும் வகையில் இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

(எ)

# பருத்தித்துறை மத்தியஸ்தர் சபை பிரதி ஞாயிறு தோறும் கூடும்

வடமராட்சி பெப்4

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை மத்தியஸ்தர் சபை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

பொது மக்கள் சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக சமூக இடைவெளியைப் பேணி மத்தியஸ்த சபைக்கு சமுகமளிக்குமாறு சபையின் தவிசாளர் ஜி. வாசுதேவன் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் இயங்கி வந்த இம்மத்தியஸ்தர் சபை கொறொனா தொற்றுப் பரவலையடுத்து விசாரணை ஏதும் இடம்பெறாமல் சில மாதங்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது பொருத்தமான மண்டபம் கிடைத்ததையடுத்து வரும் ஞாயிறு முதல் பிரதி ஞாயிறு தோறும் புகாரிடப்பட்டுள்ள பிணக்குகள் விசாரணை க்கு எடுத் துக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)



# சிறந்த எதிர்க்கட்சி தலைவர் ரணிலே!

## பிரதமர் மஹிந்த புகழாரம்

கொழும்பு, பெப். 05

**ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் - என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்றத்தில் இணைத்துக்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் உங்களின் கருத்து என்னவென எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

“பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்த அவரைத்தவிர வேறு எவருமிருக்கின்றனர் என்று நான் நினைக்கவில்லை. எதிர்க்கட்சியை வழிநடத்த அவர் மிகவும் பொருத்தமானவர். எனது நண்பர் என்பதற்காக அவ்வாறு கூறவில்லை. அரசியல் ரீதியாகப் பார்த்தால் அவரே பொருத்தமான நபர்.

“அவரது பிரசன்னம் அரசாங்கத்துக்கு பாதகமானது. ஒரு வலுவான எதிர்ப்பு எப்போதும் தேவை என்று நான் நம்புகின் றேன். தற்போதைய எதிர்ப்பு பயனளிக்கவில்லை.” - என்றும் மஹிந்த கூறினார்.

# ஐக்கியத்துடன் ஒன்றுபட்ட மனதுடன் வளமான தேசமாக முன்னேற வேண்டும்

## சபாநாயகர் வலியுறுத்து



கொழும்பு,பெப்.05

உலகளாவிய ரீதியில் கொரோனா நெருக்கடியை எதிர்கொண்டுள்ளபோதும் நாம் இலங்கைத் தேசமாக ஐக்கியத்துடன், ஒன்றுபட்ட மனதுடன் வளமான தேசமாக முன்னேற வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் 73 ஆவது தேசிய சுதந்திர தினத்தைப் பெருமையுடன் கொண்டாட மீண்டும் ஒன்றிணைந்துள்ளோம் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர் நேற்று வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு சமாதானத்தின் விடியலில் அபிவிருத்தியை நோக்கி இலங்கை நகர்ந்துவரும் சூழலில் மனித உரிமைகள் மீறப்பட்டதாக சர்வதேச ரீதியில் முன்வைக்கப்படும் அபத்தமான குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதற்கு நாம் அனைவரும் இலங்கைத் தேசத்தவர்கள் என்ற ரீதியில் ஒன்றிணைய வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் இருந்தே தேர்தல்களின் மூலம் ஆசியாவில் நீண்டகாலம் ஜனநாயகம் கொண்ட நாடு என்ற அடையாளத்தைக் கொண்டுள்ள நாம், இலங்கை பாராளுமன்றத்தின் ஊடாக நாட்டின் ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வோம். இதுபோன்ற ஜனநாயக நிறுவனக் கட்டமைப்புக்களாலேயே எந்தவொரு நாட்டின் எதிர்காலத் திசையும் தீர்மானிக்கப்படுகின்றன.

‘வளமான எதிர்காலம் - சுபீட்சமான தாய்நாடு’ என்ற தொனிப்பொருளில் இவ்வருட சுதந்திர தினத்தை அர்த்தமுள்ளதாகக் கொண்டாட அனைத்து இலங்கையர்களும் குறுகிய வேறுபாடுகளை மறந்து நிலையான பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

எனவே, இந்த மகத்தான சவாலை வெற்றிகரமாக எதிர்கொண்டு இந்த வளம் நிறைந்த நாட்டைக் கட்டியெழுப்ப இப்பெருமை மிக்க தருணத்தில் உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன் - என்று குறிப்பிட்டுள்ளார். (எ)






# மானியங்கள் ஆணைக்குழு முன் மாணவர்கள் பெரும் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப். 05

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிப் பிரச்னைக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தி கொழும்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலவசக் கல்விக்கான மாணவர் இயக்கத்தின் ஏற்பட்டில் நேற்று முன் தினம் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரும் பங்கேற்றனர்.

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து வெட்டுப்புள்ளி குழறுபடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு நீதியை நிலைநாட்டுமாறு வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நுழைவாயிலுக்கு முன்னால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோரின் உருவப் பொம்மைகளை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# இலங்கைக்கு கூகுள் வழங்கிய கௌரவம்

கொழும்பு, பெப். 05

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, கூகுள் நிறுவனம் இலங்கையைக் கௌர வித்துள்ளது.

கூகுள் நிறுவனம் தனது முகப்பு பக்கத்தில் இலங்கையின் தேசியக் கொடி பறப்பதைப்போல் பதிவு செய்துள்ளது.




# கறுப்புடையில் போராட்டம் நடத்துவது தவறான செயல்

## சரத் வீரசேகர கூறுகின்றார்



கொழும்பு, பெப். 05

73 ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ளவர்கள் கறுப்பு நிற ஆடையணிந்து போராட்டங்களில் ஈடுபட தீர்மானித்துள்ளமை தவறான செயல்பாடு என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கூட்டத்தொடரில் இலங்கையை பலவீனப்படுத்தும் வகையில் இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் இருந்து இலங்கை விடுதலை பெற்ற தினத்தையே சுதந்திரமான இலங்கை மக்கள் கொண்டாடுகிறார்கள்.

காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுதலை பெறுவதற்கு பலர் உயிர்த் தியாகம் செய்துள்ளார்கள். 73ஆவது சுதந்திர தினத்தை நாட்டு மக்கள் அனைவரும் இனம், மத மொழி வேறுபாடுகளை துறந்து இலங்கையர் என்ற அடிப்படையில் கொண்டாடவேண்டும்.

73 ஆவது சுதந்திர தினத்தன்று வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பல எதிர்ப்புப் போராட்டங்களை தமிழ் அரசியல்வாதிகள் முன்னின்று முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக அறிய முடிகிறது.

சுதந்திர தினத்தன்று கறுப்பு ஆடையணிந்து போராட்டங்களில் ஈடுப்படுவது முற்றிலும் தவறான செயல்பாடாகும். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் இன நல்லிணக்கத்தை வலுப்படுத்த பொறுப்புடன் செயற்பட வேண்டும். சாதாரண தமிழ் மக்கள் தேசிய நல்லிணக்கத்தை விரும்புகிறார்கள். பிரித்தானிய ஆட்சியில் இருந்து இலங்கை சுதந்திரமடைவதற்கு தமிழ் தலைவர்கள் முன்னின்று செயற்பட்டுள்ளார்கள்.

தற்போதுள்ள அரசியல்வாதிகள் தங்களின் குறுகிய நோக்கங்களை செயற்படுத்திக் கொள்ள தேசிய நல்லிணத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுகிறார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இம்மாதம் இடம் பெறவுள்ள 46 ஆவது கூட்டத்தொடரை அடிப்படையாக கொண்டே இவ்வாறான எதிர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளின் வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்-என்றார்.



# தமிழரின் நீதிக்கான போராட்டத்துக்கு காத்தான்குடி முஸ்லிம்கள் பேராதரவு

காத்தான்குடி, பெப். 05

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான நீதி கோரும் மாபெரும் கவனவீர்ப்புப் பேரணி மட்டக்களப்பு தாளங்குடா நகரில் இருந்து ஆரம்பித்து காத்தான்குடி நகரை அடைந்தது.

2ஆவது நாள் பேரணி நேற்று காலை மட்டக்களப்பு தாளங்குடாவிருந்து ஆரம்பித்து காத்தான்குடி நகர எல்லைக்குள் நுழைந்தபோது பெருமளவான முஸ்லிம் மக்களும் இணைந்து கொண்டனர்.

இந்நிலையில் தற்போது காத்தான்குடி நகரின் மத்திய பகுதியை பேரணி அடைந்தது.

எங்கே எங்கே உறவுகள் எங்கே?, எரிக்காதே எரிக்காதே ஜனாசாக்களை எரிக்காதே, எங்கள் நிலம் எமக்கு வேண்டும்., வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், வேண்டும் வேண்டும் உரிமை வேண்டும், திரும்பிப் பார் திரும்பிப் பார் சர்வதேசமே திரும்பிப் பார், வட கிழக்கு தமிழர்களின் தாயகம், ஐநா சபையே தலையிடு, வழங்கு வழங்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வழங்கு போன்ற முழக்கங்களை பேரணியில் பங்கேற்றுள்ள தமிழ் பேசும் மக்கள் ஒன்றாக ஓங்கி ஒலித்தனர்.

நேற்றைய பேரணியில் வடக்கு கிழக்கு சிவில் சமூகத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ்த் தேசியக் கட்சிகளை சார்ந்தவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், எஸ்.சிறிதரன், செல்வராசா கஜேந்திரன், எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்டவர்களும் பங்கேற்று வருகின்றனர்.

# கரைச்சியில் 3 ஆண்டுகளில் 150 பேர் மீளக்குடியேறினர்

கிளிநொச்சி, பெப். 05

கிளிநொச்சி - கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில், கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பிய 150 பேர் மீள்குடியேறி உள்ளனரென்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த அதிகமான குடும்பங்கள், இந்தியாவின் தமிழகத்தில் தங்கி இருந்து, தற்போது தாயகம் திரும்பி வருகின்றன.

இந்நிலையில், கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழகத்தில் இருந்து திரும்பிய 150 பேர், கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் குடியேறியுள்ளனர்.

அதாவது, 2018ஆம் ஆண்டில், 114 பேரும் 2019 ஆம் ஆண்டில், 26 பேரும் 2020ஆம் ஆண்டில், 10 பேரும் என மொத்தமாக 150 பேர் தாயகம் திரும்பி உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, 2018ஆம் ஆண்டில் திரும்பிய 85 பேருக்கும் 2019ஆம் ஆண்டில் திரும்பிய 30 பேருக்கும் 2020ஆம் ஆண்டில் திரும்பிய 06 பேருக்கும் தற்காலிக கொட்டகையமைத்தல், உபகரணங்கள் வழங்குதல், காணிகளை துப்புரவு செய்தல் என்பவற்றுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கை சுதந்திர தினத்தை ஒட்டி

# ஜனாதிபதி கோட்டாபயவுக்கு சீன அதிபர் ஜின்பிங் வாழ்த்து

கொழும்பு, பெப். 05

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

இலங்கையின் செழிப்பு மற்றும் இலங்கை மக்களின் மகிழ்ச்சிக்கு சீன மக்கள் மற்றும் சீன அரசு சார்பில் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதாக அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பரஸ்பர நம்பிக்கை, நெருக்கமான இருதரப்பு நட்பு மற்றும் பரந்த கூட்டு ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம் கொவிட் -19 தொற்றுநோயால் ஏற்பட்ட மிகப்பெரிய சவால்களை சீனா - இலங்கை நாடுகள் இணைந்து எதிர்கொண்டன என்றும் ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

சீனா-இலங்கை உறவுகளை மேலும் வலுப்படுத்த இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தொடர்ந்து பணியாற்றுவதற்கான தனது விருப்பத்தை ஜனாதிபதி ஜி மீண்டும் வலியுறுத்தினார்.

# ஐ.நா. அமைதிப்படையில் இருந்து இலங்கைப் படைகளை நிறுத்துக!

## ஜஸ்மின் சூகா வேண்டுகோள்



கொழும்பு, பெப். 05

**ஐ.நா மனித உரிமை ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையை தொடர்ந்து இலங்கைப் படையினரை அமைதிப்படை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதை ஐ.நா இடைநிறுத்த வேண்டும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறை வேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூகா வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை, அமைதிப் படையில் பணியாற்றுவதற்காக தெரிவு செய்யப்படும் இலங்கைப் படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனரா என ஆராயப்பட்டதா என்பதை உறுதி செய்யக்கூடிய நிலையில் நியூயோர்க் இல்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கைப் படையினரை அமைதிப்பணிகளில் ஈடுபடுத்துவதற்கு முன்னர் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய சட்டரீதியான கடமை ஐ.நா அமைதிப்பணிகளுக்கான திணைக்களத்திற்குள்ளது எனவும் ஜஸ்மின் சூகா குறிப்பிட்டார்.

ஐ.நா செயலாளர் நாயகத்தின் மனித உரிமை மற்றும் இலங்கையில் நீதி ஆகியவை குறித்த கொள்கை அடிப்படையிலான நிலைப்பாட்டின் அடிப்படையில் யுத்தக்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பதவி உயர்வை வழங்கினால் அதற்காக விளைவுகளை ஐக்கிய நாடுகள் அமைதிப்படை இலங்கையில் வெளிப்படுத்தவேண்டிய தருணமிது எனவும் அவர் மேலும் கூறினார்.



# கிளிநொச்சி செயலகத்தில் நூலகம் திறந்து வைப்பு

கொழும்பு, பெப். 05

கிளிநொச்சி மாவட்ட செயலக வளாகத்தில் அமைக்கப்பட்ட நூலகம் வடமாகாண ஆளுநரால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் இதனை திறந்து வைத்தார்.

இயற்கை வடிவமைப்பில் அமைக்கப்பட்ட இந்த நூலகம் சுதந்திர தின நாளின் நினைவாக திறந்த வைக்கப்பட்டது. அத்துடன் மரக்கன்றும் நாட்டி வைக்கப்பட்டது.

# இராணுவத்தினருக்கு பதவி உயர்வுகள்

கொழும்பு, பெப். 05

73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை இராணுவத்தின் 337 அதிகாரிகள் மற்றும் ஏனைய தரங்களிலுள்ள 8,226 பேருக்கு பதவி உயர்வு கிடைத்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஆயுதப்படைகளின் தளபதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

அதன்படி 14 பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரல் தரத்துக்கும், 23 கேணல்கள் பிரிகேடியர் தரத்திற்கும், 35 லெப்டினன்ட் கேணல்கள் கேணல் தரத்திற்கும், 34 மேஜர்கள் லெப்டினன்ட் கேணல் தரத்திற்கும் உயர்த்தப்பட்டுள்ளனர்.

206 கப்டன்கள் மேஜர் தரத்திற்கும், 22 லெப்டினன்ட்கள் கப்டன் தரத்திற்கும் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாவை வழங்கவும்

## அஸ்கிரிய பீடம் கோரிக்கை



கொழும்பு, பெப். 05

தோட்டத்தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளத்துக்கான ஒரு நாள்அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு சமயத் தலைவர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர்.

இது குறித்து அஸ்கிரிய விகாரை பிரதான செயலதிகாரி ஆச்சரிய மெதகம தம்மானந்த தேரர் கருத்து தெரிவிக்கையில்-

இந்த நாட்டின் பொருளாதாரத்துக்காக மிகவும் உணர்வுபூர்வமாக வேலை செய்பவர்கள் தோட்டத்தொழிலாளர்கள். அதனால் இந்த நாட்டின் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்க வேண்டும் என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் கோரிக்கை. ஆகவே இன்றுள்ள பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு அவர்களின் வாழ்க்கை நிலையும் அவர்கள் படும் துன்பங்களையும் கருத்திற் கொண்டு கம்பனிகள் எவ்வித போராட்டடும் இன்றி அடிப்படை சம்பளம் ஆயிரம் ரூபா வழங்க முன்வர வேண்டும்-என்றார்.

இது குறித்த கண்டி மறைமாவட்ட ஆயர் வியானி பெர்னாண்டோ கருத்து தெரிவிக்கையில்-

இன்று பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்து வாழும் தோட்டத்தொழிலாளர்கள் தங்களது சம்பளத்திற்காக மிகவும் அமைதியான முறையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு குரல் கொடுத்துள்ளார்கள், அவர்களின் கோரிக்கை மிகவும் நியாயமானது.

இன்று உள்ள பொருளாதார சுமைகளை கருத்திற் கொண்டு கம்பனிகள் நியாயமான சம்பளத்தினை பெற்றுக்கொடுக்க வேண்டும்.ஆகவே அவர்களின் நியாயமான சம்பள குரலுக்கு எனது குரலும் இணையும்-என்றார்.

# பிரிவினைவாதப் நான் இடமளிக்

## சுதந்திர தின உரையில்



ஜனாதிபதியின் சுதந்திர தின உரை - 2021

**நாட்டில் வாழும் சகல இனங்களைச் சேர்ந்த மக்களும் சம உரிமையுடன் வாழவேண்டும். இன மத அடிப் படையில் உரிமைகள் பிரிக்கப்படு வது தவறானதாகும்.**

**நாட்டில் பிரிவினைவாதம் தலை தூக்குவதற்கு நான் ஒருபோதும் இடமளிக்க மாட்டேன்.**

**- நாட்டின் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மக்களுக்கு விசேட உரை யாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

நமது தாய்நாடு காலனித்துவவாதிகளிடமிருந்து சுதந்திரம் பெற்று 73 ஆண்டுகள் ஆகின்றன. சுதந்திரத்தை வென்றெடுக்க பல்வேறு தியாகங்களைச் செய்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் மலாயர், பரங்கியர் போன்ற பல்வேறு சமூகங்களையும் சேர்ந்த அனைத்து தலைவர்களுக்கும் இன்றைய தினம் நாங்கள் மரியாதை செலுத்துகிறோம்.

அதேபோன்று, தேசத்தின் சுதந்திரத்திற்காகவும், இறைமைக்காகவும் தங்கள் உயிர்களை தியாகம் செய்த, பல்வேறு அர்ப்பணிப்புகளைச் செய்த படைவீரர்களையும் நான் நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

சுதந்திரம் பெற்ற 73 ஆண்டுகளில், ஒரு தேசமாக நாம் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்திருக்கின்றோம். மத மற்றும் இன அடிப்படையிலான மோதல்கள், இனவாத மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள், தேவையற்ற வெளிநாட்டு அழுத்தங்கள் மற்றும் அரசியலமைப்பு நெருக்கடிகள் போன்ற பல பிரச்னைகளை அவ்வப்போது எதிர்கொண்டோம். தேசிய பாதுகாப்பை உறுதி செய்தல், எமது நாட்டில் வாழும் பல்வேறு இனத்தவர்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், வறுமையை முற்றாக ஒழித்து வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்பி நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துதலான சவால் இன்னும் எமக்கு முன் உள்ளது.

எமது நாட்டின் தேசிய மரபுரிமைகள், பாரம்பரிய பழக்க வழக்கங்கள், தேசியம் மற்றும் தேசப்பற்று ஆகியவை கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள நிலையில், பலவீனமுற்றிருந்த தேசிய பாதுகாப்பை மீண்டும் உறுதிப்படுத்தி தாய் நாடு எதிர்கொண்ட சவால்களை வெற்றிகொள்வதற்கான தலைமைத்துவத்தை வழங்க இந்த நாட்டின் 69 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் என்னை ஜனாதிபதியாக தெரிவுசெய்தனர்.

### பௌத்த போதனையின்படியே நாட்டை நிர்வகிக்கிறேன்

நான் ஒரு சிங்கள பௌத்த தலைவர். அதை வெளிப்படுத்த நான் ஒருபோதும் தயங்க மாட்டேன். பௌத்த போதனைகளின்படியே நான் இந்த நாட்டை நிர்வகிக்கிறேன். அனைத்து சமயங்களுக்கும் அனைத்து இனங்களுக்கும் உரிய கௌரவத்தை அளிக்கும் அஹிம்சையும் அமைதியும் கொண்ட பௌத்த தத்துவத்தில், எமது நாட்டில் உள்ள அனைத்து மதங்களுக்கும் அனைத்து இனங்களுக்கும் நாட்டில் நடைமுறையில் உள்ள சட்ட கட்டமைப்பிற்குள் சரி சமமாக சுதந்திரத்தை அனுபவிக்கும் உரிமை உண்டு.

தேசியத்தை மதிக்கும், நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் ஒரு தேசிய தலைமைக்கு எதிராக தேசத்துரோக சக்திகள் அணி சேர்ந்து, தங்கள் இலக்குகளை அடைய உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் ஆதரவை நாடுகின்றன. இவர்கள் மிகவும் நுட்பமாக பல்வேறு போலிப் பிரச்சாரங்கள் மூலம் மக்களை தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றனர். இந்த நாட்டு மக்கள் எப்போதும் விவேகத்துடன் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தரவுகளின் அடிப்படையில் விடயங்களை ஆராய்ந்து உண்மைகளை அறிந்து முடிவுகள் எடுக்கப்பட்டால் எவரும் பொது மக்களை தவறாக வழிநடத்த முடியாது.

நான் முன்வைத்த “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவே மக்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு வாய்ப்பளித்துள்ளனர்.

எதிர்கால சந்ததியினருக்காக நாம் வென்ற சுதந்திரத்தை எப்போதும் பாதுகாப்பதற்கும், எமது நாட்டின் ஒருமைப்பாடு, ஆள்புல எல்லை மற்றும் இறைமையைப் பாதுகாப்பதற்கும் அரச தலைவர் என்ற முறையில் நான் உறுதியளித்திருக்கிறேன். அந்த உறுதிமொழியை நான் எப்போதும் பாதுகாப்பேன்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இந்த நாட்டில் வாழும் அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமை உண்டு. இன அல்லது மத அடிப்படையில் குடிமக்களைப் பிரிப்பதற்கான முயற்சிகளை நாங்கள் நிராகரிக்கிறோம். அனைத்து குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன், ஒரே சட்டம் என்ற கொள்கையே எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதுவே எப்போதும் எமது நிலைப்பாடு.

நாங்கள் எப்போதும் சட்டத்தின் ஆட்சியை மதிக்கிறோம். கடந்த காலத்தில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் நீதித்துறை மீது அரசியல்வாதிகள் மேற்கொண்டிருந்த அழுத்தத்தை மக்கள் நிராகரித்தனர். சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளிடமிருந்து நியாயமான, பக்கச்சார்பற்ற மற்றும் திறமையான சேவையை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதன்படி, மக்களின் முக்கிய கவனத்தை ஈர்த்த உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் மற்றும் மத்திய வங்கி மோசடி போன்ற குற்றங்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு நான் அறிவுறுத்தியுள்ளேன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பணிகள் நிறைவுற்றதுமே அந்த அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் கடந்த பாராளுமன்றத்தினால் இது பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு குறித்த கண்காணிப்பு செயற்குழுவின் பரிந்துரைகளும் கவனத்திற் கொள்ளப்பட்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். இந்த கொடூரமான குற்றத்தைத் திட்டமிட்ட, உதவி ஒத்தாசைகள் வழங்கிய பொறுப்பானவர்கள் எவரும் சட்டத்திற்கு முகங்கொடுக்காமல் தப்பிக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம். அதே போன்று இந்த நாட்டில் தீவிரவாதம் மீண்டும் தலைதூக்கவும் நாம் இடமளிக்க மாட்டோம்.

### கோவிட் தொற்றினால் உருவான நெருக்கடி

கோவிட் தொற்றுநோயால் முழு உலகமும் நெருக்கடியில் இருக்கும் இந்த நேரத்தில், எமது நாடும் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு வருடத்திற்கும் மேலாக இந்த தொற்றுநோய் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி செயன்முறைக்கும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் ஒரு தடையாக இருந்து வருகிறது.

தற்போது, உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் கோவிட் வைரஸிற்கான தடுப்பூசிகளை வெற்றிகரமாக பரீட்சித்துள்ளன. இந்த தடுப்பூசிகளை விரைவாகப் பெறுவதற்கு இலங்கைக்கு உதவுமாறு இந்தியா, சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தலைவர்களிடம் நான் கேட்டுக்கொண்டேன். இந்த விடயம் தொடர்பில் உலக சுகாதார அமைப்புடனும் அரசாங்கம் கலந்துரையாடியது. அதன்படி, ஒரு தடுப்பூசி ஏற்கனவே இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு எமது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போதைய உலகளாவிய நெருக்கடியை எதிர்கொண்டு அனைத்து நாடுகளும் கற்றுக்கொண்ட ஒரு முக்கியமான பாடம் வலுவான தேசிய உற்பத்தியாளர்களின் தேவையாகும். உணவுப் பாதுகாப்பு மற்றும் தன்னிறைவு ஆகியவற்றை உறுதி செய்வதற்காக சுதேச விவசாயத்துறையை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற எங்கள் கொள்கையானது சரியானதும் காலத்திற்கு ஏற்றதுமாகும் என்பதை இது மேலும் உறுதிப்படுத்துகிறது.

இலவச உர விநியோகம், நெல்லுக்கான உத்தரவாத விலையை ரூ.50 வரை உயர்த்தியமை, விவசாய கடன்களை தள்ளுபடி செய்தல், நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான குளங்களை புனரமைத்தல், வீட்டுத் தோட்டம் மற்றும் நகர்ப்புற விவசாய மேம்பாடு மற்றும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல் போன்ற ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மூலம் நாட்டில் விவசாய மறுமலர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்போம். நெல், சோளம், தானிய வகைகள், உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் ஆகியவற்றின் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் இறக்குமதி வரியை முகாமைத்துவம் செய்து, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட முடியுமான மஞ்சள் போன்ற பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதன் மூலமும், மிளகு போன்ற பயிர்களின் மீள் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் விவசாயிகளை வலுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் மூலம் வெற்றிகரமான பெறுபேறுகள் கிடைக்கப் பெற்று வருகின்றன. உள்நாட்டு உற்பத்தி அதிகரித்து ஏற்றுமதி வாய்ப்புகள் விரிவடைந்துள்ளன.

உள்ளூர் விவசாயிகளை பொருளாதார ரீதியாக வலுப்படுத்த விவசாயிகளை தொழில்முயற்சியாளர்களாக மாற்ற வேண்டும் என்று நான் எப்போதும் கூறியுள்ளேன், நாட்டிற்கு பெரும் அந்நிய செலாவணியைக் கொண்டுவரும் ஒரு துறையாக விவசாயத்தை மேலும் மேம்படுத்துவதே எங்கள் நோக்கம்.

பொருளாதார வளர்ச்சியில் தொழில்துறை மற்றும் சேவைத் துறைகளின் முக்கியத்துவத்தை நாம் மறக்கவில்லை. சமீப காலங்களில், இந்தத் துறைகளுக்கு வரிச் சலுகைகளை வழங்குவதன் மூலமும், வட்டி விகிதங்களைக் குறைப்பதன் மூலமும் தொழில்துறை மற்றும் சேவைத் துறைகளை ஊக்குவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. பத்திக், பிரம்பு, களிமண் மற்றும் ஆபரணங்கள் போன்ற பாரம்பரியத் தொழில்களை மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்ட இராஜாங்க அமைச்சுக்கள் மூலம் ஏற்கனவே பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

எமது நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் மற்றும் சுயதொழில் செய்பவர்களுக்கு மிகவும் குறைந்த ஒற்றை இலக்க வட்டி விகித கடன் வசதிகளை வழங்குவதிலும், தேவையான ஒப்புதல்களைப் பெறுவதில் ஏற்படும் தாமதங்களைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதற்கும் அவர்களுக்குத் தேவையான பயிற்சி அளிப்பதற்கும் நாங்கள் கவனம் செலுத்தினோம்.

நிர்மாணத் துறையினருக்கு ஊக்கமளித்தல் செயலிழந்திருக்கும் பொருளாதாரத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கான வெற்றிகரமான ஒரு மூலோபாயமாகும். அதன்படி, நாங்கள் ஏற்கனவே ஆரம்பித்துள்ள 100,000 கி.மீ வீதி அபிவிருத்தி திட்டம், பத்தாயிரம் பாலங்கள் அமைத்தல், நாடு முழுவதும் குளங்களை புனரமைக்கும் நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம், ‘ஒரு கிராமத்திற்கு ஒரு வீடு’ என்ற கருப்பொருளின் கீழ் 14,000 கிராமப்புற வீடுகளை நிர்மாணித்தல், நகர்ப்புற சேரிப்புறங்களில் வசிப்போர், குறைந்த



வருமானம் ஈட்டுபவர்கள் மற்றும் நடுத்தர வருமானம் ஈட்டுபவர்களுக்காக ஒரு லட்சம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம், தோட்ட மக்களுக்கு 4,000 வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் நாடு முழுவதும் மக்கள் செறிவாக உள்ள பகுதிகளில் நடைபாதைகள் அமைத்தல் போன்ற திட்டங்கள் பொதுமக்களின் நலனுக்கும் பொருளாதாரம் புத்துயிர் பெறுவதற்கும் நேரடியாக பங்களிக்கும்.

### தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் திட்டம்

விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகிய மூன்று துறைகளின் வளர்ச்சியின் மூலம் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டிற்கான தடைகளை அகற்றவும் நாங்கள் நடவடிக்கை எடுப்போம். நாட்டின் பொருளாதார மையப்பகுதியை வெளிநாட்டினருக்கு விற்கக் கூடாது என்ற கொள்கை எவ்வித மாற்றமும் இன்றி பின்பற்றப்படுவதுடன், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு கொண்டு வரப்படுவதைத் தடுக்க பல்வேறு திட்டங்கள் குறித்து தவறான வியாக்கியானங்களை முன்வைப்போரின் அரசியல் உள்நோக்கங்களை பெரும்பான்மையான மக்கள் அறிவுபூர்வமாக ஆராய்வார்கள்

# ...ம் தலைதூக்க ...க மாட்டேன்

## ...ல் ஜனாதிபதி உறுதி

என்று நாங்கள் நம்புகிறோம்.

எங்கள் நாட்டின் மக்களையும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகங்களை பாதிக்கும் காலாவதியான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை மாற்றவும் புதுப்பிக்கவும் நான் இப்போது ஒரு விசேட ஜனாதிபதி செயலணியை அமைத்துள்ளேன். பல காலமாக விவாதிக்கப்பட்டாலும் செயற்படுத்தப்படாதிருந்த இந்த செயன்முறையை நாங்கள் இப்போது ஆரம்பித்துள்ளோம். இந்த குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது நாட்டின் எதிர்கால பொருளாதார மேம்பாட்டு செயன்முறைக்கு பெரும் உதவியாக இருக்கும் என்று நம்புகிறோம். 21 ஆம் நூற்றாண்டு அறிவு மைய நூற்றாண்டாக கருதப் படுகிறது.

நாட்டின்வளர்ச்சிக்கு மனித வளங்கள் மிக முக்கியமானவை. அறிவு மற்றும் திறன்கள் நிறைந்த எதிர்கால தலைமுறையை உருவாக்க கல்வித்துறையில் சீர்திருத்தத்தின் அவசியம் குறித்து “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கை திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன்படி, கல்வித்துறையில் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்ள ஒரு தனியான இராஜாங்க அமைச்சை நாங்கள் நிறுவியுள்ளோம். இந்த சீர்திருத்தங்களைச் செய்வதற்குத் தேவையான நிபுணத்துவ உதவியைப் பெறும் நோக்கில் இரண்டு செயலணிகள் நிறுவப்பட்டன. இவர்களது பரிந்துரைகளை அமுல்படுத்துவது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை இவ்வருடம் 10,000 அல்லது 30% ஆக அதிகரித்துள்ளது. அரச தொழில்நுட்பக் கல்லூரிகளில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை 100,000 லிருந்து 200,000 ஆக உயர்த்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்களின் கொள்ளளவை அதிகரிக்கும் பொருட்டு, அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் நகர்ப்புற பல்கலைக்கழக அமைப்புக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கல்வி சீர்திருத்த திட்டங்களை செயல்படுத்துவதை விரைவுபடுத்துவோம். அதன்படி, அடுத்த சில ஆண்டுகளில் கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க தரமான முன்னேற்றம் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.



நவீன உலகில் எமது பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்ள, புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஒரு சமூகத்தை எமது நாட்டில் உருவாக்க வேண்டும்.

போட்டித்தன்மையுடன் வெற்றிபெற, விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் போன்ற அனைத்து துறைகளும் எதிர்காலத்தில் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும். இதற்கு உதவும் வகையில், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் தொழில்நுட்ப புத்தாக்க கலாசாரத்தை உருவாக்க நாம் எதிர்பார்த்துள்ளோம்.

**சுபீட்சத்தின் நோக்கு அரசாங்கத்தின் திட்டம்**

“சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைகளுக்கு ஏற்ப, பொருளாதார அபிவிருத்திக்கு அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும், புத்தாக்கங்களை ஊக்குவிக்கவும் அரசாங்கம் குறிப்பிடத்தக்க உதவிகளை வழங்கும். தொழில்நுட்ப துறைகளுக்கு ஏற்கனவே பல வரிச்சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் தொழில்நுட்பத்திற்காக ஒரு தனியான அமைச்சு நிறுவப்பட்டு அதை எனது பொறுப்பின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த அமைச்சின் மூலம், தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள் மற்றும் கட்டமைப்புகளை உருவாக்குவது, அத்துடன் அரச பொறிமுறை மற்றும் சந்தை செயன்முறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கான ஒரு கருவியாக தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி டிஜிட்டல் நிர்வாகத்தை விரிவுபடுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படும். தொழில்நுட்பத் துறையில் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தெரிவுசெய்யப்பட்ட ஐந்து மாவட்டங்களில்ஐந்து தொழில்நுட்ப பூங்காக்களை அனைத்து வசதிகளுடன் திறக்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஊக்குவிப்புகள் மூலம் தொழில்நுட்பத் துறையில் ஒரு மறுமலர்ச்சியைக் கொண்டுவருவதற்கான வாய்ப்பு எமக்குக் கிடைக்கிறது.

இதுவரை நான் கூறியவை அனைத்தும் முழு உல கையும் முடக்கிவிட்டிருந்த கோவிட் தொற்றுநோயை எதிர்கொண்ட நிலையில், ஒரு வருட குறுகிய காலாத்திற்குள் செய்யப்பட்டுள் ளன என்பதை மறந்துவிடக் கூடாது என்று இந்த நாட்டின் விவேகமான மக்களிடம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

**சுற்றுலாத்துறையை மீளமைக்க நடவடிக்கை**

ஆண்டுதோறும் சுமார் 4,500 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய செலாவணியை ஈட்டித்தந்த சுற்றுலாத் துறை, இந்த நாட்டில் கிட்டத்தட்ட மூன்று மில்லியன் மக்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை வழங்கியது. இன்று, இந்த மக்கள் தமது வாழ்வாதார வழிகளை இழந்து கடும் நெருக்கடியில் உள்ளனர். இந்த மக்களுக்கு நாம் விரைவில் தீர்வுகளை வழங்க வேண்டும். எனவே, சுகாதார வழிகாட்டல்களை கண்டிப்பாக பின்பற்றி, முறையான திட்டத்தின் கீழ் சுற்றுலாத்துறையை படிப்படியாக மீள ஆரம்பிக்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நான் எப்போதும் சூழலை நேசிப்பவன். நான் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக இருந்தபோது, நகரங்களை அழகுபடுத்தல், வீடமைப்பு அபிவிருத்தி, நடைப்பாதைகள் மற்றும் நகர்ப்புற பூங்காக்கள் போன்ற அனைத்து திட்டங்களிலும் சூழலைப் பாதுகாத்து அந்த அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்தேன். வருங்கால சந்ததியினருக்காக சூழலைப் பாதுகாக்க இன்றும் எனது அரசு விசேட கவனம் செலுத்தி வருகிறது. நகர்ப்புற வனப் பூங்காக்களை அமைத்தல், பசுமை நகர திட்டமிடல், பசுமை திட்டங்கள், தேசிய மர நடுகை திட்டங்கள், கால் வாய்கள் மற்றும் நீர்த்தேக்கங்களை புனரமைத்தல், தரிசு நெல் வயல்களை மீண்டும் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்துதல், சேதன உரங்களை பயன்படுத்துவதை ஊக்குவித்தல், பிளாஸ்டிக் பயன்பாட்டை கட்டுப்படுத்துதல் ஆகிய இவை அனைத்தும் இந்த அரசாங்கம் பேண்தகு சுற்றாடல் முகாமைத்துவ கொள்கையை நடைமுறைப்படுத்தி வருவதை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கையின் அடிப்படை என்னவென்றால், பொருளாதார சுதந்திரம் இல்லாமல் பொருளாதாரத்தின் உண்மையான பெறுபேறுகளை அடைய முடியாது என்பதாகும். வறுமையை ஒழித்தல், அனைத்து குடிமக்களின் முன்னேற்றத்திற்கும் சமமான வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் சுதேச வர்த்தகர்களை ஊக்குவித்தல் போன்ற அரசாங்கத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ள எங்களுக்கு ஒரு தூய்மையான, வினைத்திறன் வாய்ந்த அரச சேவை அத்தியவசியமானதாகும். எமது நாட்டின் அரச சேவை என்பது நாடு முழுவதும் பரவியுள்ள ஒரு வலுவான பொறிமுறையாகும். உலகின் பல நாடுகளுக்கு கிடைக்காத மிகப்பெரிய வாய்ப்பு இது. எனவே, இந்த வலுவான பொறிமுறையானது நாட்டின் தீர்மானம் எடுக்கும் செயன்முறைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இருப்பி னும், இன்று ஒவ்வொரு மட்டத்திலும் முடிவெடுப்பதில் ஒரு பலவீனத்தைக் காண்கிறோம். மிகவும் எளிமையான நிறுவனம் சார்ந்த விடயங்கள் தொடர்பான முடிவுகளில் கூட, அதிகாரிகள் முடிவுகளை எடுப்பதில்லை, அவற்றை அமைச்சரவையிடம் முன்வைக்கின்றார்கள். ஒவ்வொரு விடயத்திலும் சுற்றறிக்கைகளை எதிர்பார்க்கின்றனர்.

அவர்கள் தீர்மானங்களை எடுக்கக்கூடிய எல்லைக்குள் கூட தீர்மானங்களை எடுக்க தயங்குகிறார்கள். இந்த நிலைமை மாற்றப்படாவிட்டால் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வது மிகவும் கடினம்.

சரியான முடிவுகளை எடுத்து நாட்டிற்காக உழைக்கும் அரச ஊழியர்களை மேலும் பாதுகாக்க தேவையான சட்ட சீர்திருத்தங்கள் தயாரிக்கப்படுகின்றன. எனவே, சேவைகளை வழங்குவதில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் கட்டுப்பாடுகள் மற்றும் முறைமைகளை தளர்த்தி அரச பொறிமுறையை நடைமுறைப்படுத்துமாறு பொறுப்புள்ள அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

“கிராமத்துடன் உரையாடல்” திட்டத்தில் நான் தனிப்பட்ட முறையில் செயற்திறமாக பங்கேற்கிறேன், ஏனெ னில் கிராமப்புற அபிவிருத்தி அரசாங்கத்தின் முதன்மை முன்னுரிமையாகும். “சுபீட்சத்தின் நோக்கு” கொள்கை திட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கைகளை கிராமிய மட்டத்தில் செயல்படுத்துவதில் மாவட்ட மற்றும் பிரதேச மட்ட அரசாங்க பொறிமுறைகள் மிக முக்கியமானவை. இந்த அபிவிருத்தி செயன்முறையில், ஆளுநர்கள், மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகள் முதல் கிராமிய மட்டத்தில் சேவைகளை வழங்கும் கிராம சேவகர்கள், சமுர்தி அதிகாரிகள், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள், குடும்ப சுகாதார சேவை அதிகாரிகள், அபிவிருத்தி அலுவலர்கள் என ஒவ்வொரு அரச ஊழியருக்கும் தெளிவான பொறுப்பு உள்ளது. கொரோனா தொற்றுநோய் நிலைமைகளின் போது நோயைக் கட்டுப்படுத்துவதற்கும் பிற சேவைகளை வழங்குவதற்கும் அவர்கள் அனைவரும் எங்களுக்கு ஒரு பெரிய பலமாக இருந்தனர். நாட்டின் பொருளாதார அபிவிருத்தி சவால்களை வெற்றிகொள்வதில் அரச ஊழியர்களின் அதிகபட்ச பங்களிப்பை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

தேசிய விவகாரங்களிலும் கிராமப்புற அபிவிருத்தியிலும் அரசியல் தலைமைக்கு பெரும் பொறுப்பு உள்ளது. எமது அரசாங்கத்தில் அனைத்து அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் அரசியல் பிரதிநிதிகள் ஆகியோர் மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளில் தீவிரமாக பங்கேற்கும் ஒரு பொறிமுறையை நாங்கள் நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

ஊழல் மற்றும் வீண்விரயம் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் தடைகள். அரச நிர்வாகத்தில் ஊழல் மற்றும் விரயங்களை ஒழிக்க நாம் முன்மாதிரியாக செயற்பட்டு வருகிறோம். ஊழல் மற்றும் வீண் விரயங்களில் குற்றவாளியான எவர் தொடர்பிலும் அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் நெகிழ்வுப் போக்கை கடைபிடிக்க மாட்டோம்.

இருப்பினும், இன்று அரச துறையில் ஊழலைத் தடுப்பதற்கு மிகப்பெரிய தடையாக இருப்பது விருப்பத்துடனோ அல்லது விருப்பமின்றியோ மக்கள் இவற்றுக்கு வழங்கும் மறைமுக ஆதரவாகும். எனவே, ஊழலுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ துணைபோக வேண்டாம் என்று மக்களை நான் கேட்டுக்கொள்கிறேன். எவரேனும் ஒருவர் ஊழலில் ஈடுபட்டு உங்களை அவ்வாறு செய்ய தூண்டினால், சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அதனை தெரியப்படுத்துங்கள். ஊழல் மற்றும் வீண்விரயங்களை ஒழிக்க நாடு முழுவதும் ஒரு சமூக கருத்தை உருவாக்குவதில் என்னுடன் இணையுமாறு உங்களை அழைக்கிறேன். எமது எதிர்கால சந்ததியினருக்கு இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இதற்கு ஊடகங்கள் வழங்கும் ஆதரவையும் நாங்கள் பாராட்டுகிறோம்.

**மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற செயற்படுவேன்**

என்னை ஜனாதிபதியாக தேர்ந்தெடுப்பதற்கு கடுமையாக உழைத்ததாக பல்வேறு தரப்பினர் கூறுகின்றனர். அது உண்மையாக இருக்கலாம். சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களும் எனக்கு ஆதரவு அளித்தனர். பெரும்பான்மையான மக்கள் அவர்களது தனிப்பட்ட இலாபத்திற்காக அன்றி, என்னிடமிருந்து நாட்டிற்கான சேவையை எதிர்பார்த்தே அவ்வாறு செய்தார்கள் என்று நான் நம்புகிறேன். இத்தகைய நேர்மையான நோக்கங்களுடன் என்னை ஆதரித்த மக்களின் பொதுவான அபிலாஷைகளை நிறைவேற்ற நான் எப்போதும் செயற்படுவேன். ஆனால் தனிப்பட்ட அல்லது வர்த்தக நலன்களை நிறைவேற்றுவதற்கான குறுகிய நோக்கத்துடன் என்னை ஆதரித்தவர்களை மகிழ்விப்பதற்காக நாட்டிற்கு தீங்கு விளைவிக்கும் முடிவுகளை எடுக்க நான் ஒருபோதும் தயாராக இல்லை.

வரலாறு முழுவதும், வலுவான நாகரிகங்கள் கட்டியெழுப்பப்பட்டதும், நாடுகள் அபிவிருத்தி செய்யப்பட்டதும் எதிர்காலத்தை சாதகமாகப் பார்த்து, இலக்குகளை நோக்கி பயணித்த மனிதர்களினாலேயாகும். இந்த நேரத்தில் எமது நாட்டின் வளர்ச்சிக்கும் இத்தகைய சிந்தனை தேவை.

மற்றவர்கள் செய்யும் அனைத்திலும் தவறுகளை மட்டுமே பார்க்கும், சமூகத்திற்காக எதுவும் செய்யாத அவநம்பிக்கையாளர்களிடமிருந்து நாட்டின் முன்னேற்றத்திற்கு எந்தவொரு பங்களிப்பும் கிடைக்காது.

இன்று எமக்குத் தேவைப்படுவது நாட்டை நேசிக்கும், சமூகத்திற்கு பய னுள்ள, விமர்சனங்களை ஒதுக்கி வைத்து, பிரச்னைகளுக்கு நடைமுறை தீர்வுகளை வழங்கும் நேர்மறையான குடிமக் களின் ஆசீர்வாதமும் ஆதரவுமே ஆகும்.

உற்பத்தி திறன்வாய்ந்த குடிமகன், மகிழ்ச்சியான குடும்பம், ஒழுக்கப்பண்பாடான சமூகம் மற்றும் சுபீட்சமான தேசம் என்ற அடிப்படை நோக்கங்களை அடைய நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம். எமது நாட்டின் பெரும்பான்மையான மக்கள் சரியான பங்களிப்பைச் செய்தால் அந்த நோக்கங்களை அடைய முடியும். எனவே, ஒரு நேர்மறையான அணுகுமுறையுடன், உங்களுடைய - என்னுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப எங்களுடன் இணையுமாறு இந்த நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் நான் மீண்டும் அழைப்பு விடுக்கிறேன்.

நீங்கள் கேட்ட தலைவர் நான். நீங்கள் என்னிடம் ஒப்படைத்த பொறுப்பை நான் குறைவின்றி நிறைவேற்றுவேன் - என்று குறிப்பிட்டுள்ளார்.






## சுதந்திர தினம் கரிநாள்:

# கறுப்புப் பட்டியுடன் யாழில் போராட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.05

**நாட்டின் 73ஆவது சுதந்திர தினமான நேற்று வடக்கு - கிழக்கில் காணா மலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி உறவினர்களால் கரிநாள் கடைப்பிடிக்கப்பட்டது.**

**இந்நிலையில் யாழ். நகர் மத்திய பேருந்து நிலையம் முன்பு காணாமலாக் கப்பட்டோரின் உறவினர்களால் கறுப்புப்பட்டி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

நேற்று முற்பகல் 10 மணிக்கு போராட்டம் திட்டமிடப் பட்ட நிலையில் போராட்ட இடத்துக்கு வருகை தந்த யாழ்ப் பாணம் பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவை வாசித்துக் காண்பித்தனர்.

எனினும் நீதிமன்றக் கட்ட ளையில் பெயர் குறிப்பிடப் பட்ட எவரும் போராட்டத்தில் இல்லாமையால் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் கள் பொலிஸாரின் அறிவுறுத் தலை ஏற்க மறுத்தனர்.

எவ்வாறாயினும் போராட் டத்தைத் தடுக்க பொலிஸார் கடும் முயற்சிகளை மேற் கொண்டபோதிலும் போராட் டத்தை தொடர்ந்து முன்னெடுத் தனர். இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் லந்துகொண்டார். (எ)




## “இல்லாத புலிகளுக்கு எவ்வாறு உதவ முடியும்”

### போராட்டம் தொடர்கிறது

கிளிநொச்சி,பெப்.05

தமிழீழ விடுதலைப் புலி களுக்கு உதவிய மற்றும் சந் தேகத்தில் கைது செய்யப்பட்ட தமது உறவுகளை விடுதலை செய்யக்கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் இடம்பெற்றது.

கடந்த திங்கள்கிழமை கிளி நொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாக பந்தல் அமைக்கப் பட்டு ஆரம்பிக்கப்பட்ட இந் தப் போராட்டம் தொடர் போராட்டமாக முன்னெடுக் கப்பட்டு வருகின்றது. (எ)

## விதிமுறைகளை மீறிய மேலும் 11 பேர் கைது



கொழும்பு,பெப்.05

முகக்கவசம் அணியத்தவறிய மற்றும் கொரோனா சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறை வடைந்த கடந்த 24 மணிநேர காலப்பகுதிக்குள் 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 2,981 பேர் கைதுசெய்யப்பட் டுள்ளனர் என பிரதிப் பொலிஸ் மா அதிபர் பொலிஸ் ஊட கப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள் ளார்.

மேலும் தனிமைப்படுத் தல் விதிமுறை களை மீறுகின்ற வர்க ளைக் கைது செய்வ தற்கான நடவ டிக்கைகள் தொடர்ந்து மேற்கொள் ளப் படுகிறது என் றும் அவர் தெரி வித்தார். (எ)




## வெளிநாடுகளுக்கு தப்பிச்சென்ற 129 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு,பெப்.05


பல்வேறு குற்றச்செயல்களு டன் தொடர்புபட்டு வெளி நாடுகளுக்குத் தப்பிச்சென் றுள்ள 129 சந்தேகநபர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் அவர் இவ்வாறு குறிப்பிட் டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ள 129 சந்தேக நபர்களில் 40 பேர் இந்நாட்டில் இடம்பெற்றுள்ள பல்வேறு நிதி மோசடிகள் தொடர்பில் தேடப்பட்டு வருபவர்கள்.

அத்துடன் வேறு குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் தேடப்பட்டு வரும் 87 பேருக்கு சர்வதேச பொலிஸார் நீல எச் சரிக்கை விடுத்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார். (எ)

## சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கைக்கு ரஷ்யா வாழ்த்து



மொஸ்கோ,பெப்.05

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ரஷ்ய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா ரஷ்யா சார்பில் தனது வாழ்த்துக்களைத் தெரி வித்துள்ளார்.

இலங்கை மக்கள் காலனித் துவவாதிகளுக்கு எதிரான போராட்டத்தில் நீண்ட தூரம் பயணித்து வந்துள்ளனர். பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சி யின் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக 1948 இல் நாடு சுதந்தி ரம் பெற்றது.

நவீன இலங்கை இறை யாண்மை, ஜனநாயக மற்றும் சமூக நோக்குடைய அரசாக உலகில் தகுதியான மரியாதை பெறுகிறது. அதன் குடிமக்கள் தங்கள் பண்டைய வரலாற்றை மட்டுமல்லாமல், பொருளாதார வளர்ச்சித் துறையில் அவர்கள் செய்த பெரிய சாதனைகளை யும் பெருமையாகக் கருதுகின் றோம்.

ரஷ்ய-இலங்கை இருதரப்பு உறவுகள் அவை நிறுவப்பட்ட திலிருந்து தொடர்ந்து ஆக்க பூர்வமாகவே இருக்கின்றன. நாங்கள் அரசியல் தொடர்பு களை மிக உயர்ந்த மற்றும் உயர் மட்டங்களில் பராமரிக் கிறோம்.

மேலும் சர்வதேச அரங்கில், ஐ.நா மற்றும் பிற பலதரப்பு தளங்களில் உற்பத்தி ரீதியாக ஒத்துழைக்கின்றோம். ரஷ்யா பாரம்பரியமாக இலங்கையின் ஒரு முக்கிய வர்த்தக பங்காளி யாகவும், இலங்கைத் தேயி லையின் மிகப்பெரிய இறக்கு மதியாளர்களில் ஒருவராகவும் இருந்து வருகிறது.

நாட்டின் காட்சிகள் பாரம் பரியமாக ஏராளமான ரஷ்ய சுற்றுலாப் பயணிகளை ஈர்க் கின்றன. இயற்கையாகவே, கொரோனா வைரஸ் தொற்று நிலைமையை மாற்றிவிட்டது.

நமது இலங்கை நண்பர்க ளுக்கு அவர்களின் தேசிய தினத் தன்று உங்களுக்கு மகிழ்ச்சி, அமைதி மற்றும் செழிப்பு உண் டாக வாழ்த்துகின்றோம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## அமெரிக்க வெளியுறவு செயலர் இலங்கை மக்களுக்கு வாழ்த்து




வாஷிங்டன்,பெப்.05

இலங்கை மக்கள் அனைவ ருக்கும் இது பாதுகாப்பான, மகிழ்ச்சி நிறைந்த சுதந்திர தின விழாவாகவும், நம்பிக்கைக்கு ரியதோர் ஆண்டாகவும் அமைய வாழ்த்துகின்றோம் என்று அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் அன்ரனி ஜே. பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தின நிகழ்வை முன் னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

73 ஆவது சுதந்திர தினத்தை நீங்கள் கொண்டாடும் இவ்வேளையில் அமெரிக்க மக்களின் சார்பில் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை நான் இந்நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நாளில் ஜனநாயகத்தை யும், மனித உரிமைகளையும், சட்டத்தின் ஆட்சியையும், அனைவருக்குமான நீதிச் சமத் துவத்தையும் பாதுகாத்து மேம் படுத்துவதற்கான எமது பொதுக் கொள்கைகளை இலங்கை மற் றும் அமெரிக்க நாட்டு மக்களாகிய நாம் கொண்டாடு கின்றோம்.

ஜனநாயகச் செயல்பாடு களின் வெற்றி என்பது இக்கொள்கைகளை எவ்வாறு அனைத்து குடிமக்களுக்காக வும் நிலை நிறுத்துகின்றோம் என்பதிலேயே தங்கியுள்ளது.

பிராந்தியப் பாதுகாப்பை மேம்படுத்தவும், இந்து - பசுபிக் பிராந்தியத்தின் வளர்ச்சிக்காக வும் இலங்கையின் ஒரு பங்காள ராக, நண்பனாக செயல்பட நாம் எதிர்பார்க்கின்றோம்.

கொரோனா தொற்றுப் பரவலை இல்லாதொழிக்கவும், உலகப் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கவும், எதிர்காலச் சவால்களை ஒன்றாக எதிர் கொள்ளவும் எமது தொடர்ச்சி யான ஒத்துழைப்புக்களை வழங்குவோம் என்று குறிப்பிட் டுள்ளார். (எ)

# இலங்கையின் 73ஆவது சுதந்திர தின நிகழ்வு








நாட்டின் 73 ஆவது சுதந்திர தின நிகழ்வு ‘செழிப்பான நாளை - செழிப்பான நாடு” எனும் தொனிப் பொருளில் சுதந்திரச் சதுக்கத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர், சுதந்திர நிகழ்வில் பாரியார்கள் சகிதம் கலந்துகொண்டனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.











இலங்கையின் 73ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்றன. இதன்போது தேசியக் கொடியை பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் ஏற்றிவைக்க, தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.





இலங்கையின் 73ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையில் தேசிய கொடி ஏற்றப்பட்டு இடம்பெற்றன. தேசிய கொடியை பிரதேச சபைச் செயலாளர் செ.சண்முகதாசன் ஏற்றி வைத்தார்.அதனைத் தொடர்ந்து மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன.






இலங்கையின் 73ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சமன் பந்துலசேன தலைமையில் வவுனியா நகர சபை மைதானத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றன. இதன்போது சிங்கள மாணவர்களால் தமிழ் மொழியிலும், தமிழ் மாணவர்களால் சிங்கள மொழியிலும் தேசிய கீதம் பாடப்பட்டது.



## பொன்னாக மின்னப்போகும் பிரான்ஸின் ஈபிள் கோபுரம்!

*பாரிஸ், பெப். 05*

பாரிஸின் இரும்புப் பெண்ணான ஈபிள் கோபுரம் 2024 ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு எழில் கோலம் பூணவுள்ளது.

ஈபிள் கோபுரம் அதன் 136 வருட வரலாற்றில் முதல் முறையாக மிகச் சிறப்பான மறுசீரமைப்பைச் சந்திக்கின்றது என்ற தகவல் வெளியாகி உள்ளது.

அதன் தற்போதைய பளுப்பு மண் நிறம் மாற்றப்பட்டு பொன் நிறத்தில் மிளிரும் வண்ணம் புதிய வர்ணப் பூச்சு வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் 19 தடவைகள் பூசப்பட்ட வர்ணப் பூச்சுகள் அகற்றப்பட்டு கோபுரம் முழுவதுமாக சுத்திகரிக்கப்பட்ட பிறகு பொன் நிறத் தெறிப்பை ஏற்படுத்தக் கூடியவாறு மஞ்சள் மண் நிற வண்ணம் பூசும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கோபுரத்தைப் பராமரிக்கும் நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

1968 இல் இருந்து கோபுரம் அதன் தற்போதைய பளுப்பு மண்ணிறத் திலேயே தோற்றமளிக்கின்றது.

25 இலட்சம் இரும்பு ஆணிகளால் 18 ஆயிரம் இரும்புச்சட்டங்கள் கொண்டு பொருத்தப்பட்ட - 324 மீற்றர்கள் உயரம் கொண்ட - கோபுரத்தின் சீரமைப்புப் பணிகள் 5கோடி யூரோக்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார் சுமார் 1,150 கோடி ரூபா செலவில் நடைபெறவுள்ளன.

தற்சமயம் கோபுரத்தின் பழைய வர்ணப் பூச்சுகளை சேதம் ஏதுமின்றி அகற்றும் வேலைகளில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

உலகில் ஆண்டு தோறும் மிக அதிக எண்ணிக்கையானவர்களால் பார்வையிடப்பட்டுவரும் உலக அதிசயமான ஈபிள் கோபுரம் ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை பாதுகாப்புக் கருதி வண்ணப்பூச்சு செய்யப்படுவது வழக்கம். ஆனால், அதன் அடிப்படை நிறம் மாற்றப்படுவது 1968 ஆம் ஆண்டின் பின்னர் இதுவே முதல் முறை ஆகும்.

2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் ஈபிள் கோபுரம் கவர்ச்சிகரமான முக்கிய பங்கை வகிக்க உள்ளது. சைக்கிள் மற்றும் திறந்த வெளி நீச்சல் போன்ற போட்டிகளை ஈபிள் கோபுரத்தைப் பின்னணியாகக் கொண்ட சென் நதி பகுதியில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்குது.

# 4 ஆயிரம் திரிபு வைரஸ்கள் உலகெங்கும் பரவியுள்ளன

### பிரிட்டனின் தடுப்பூசி கண்காணிப்பு அமைச்சர்

*லண்டன், பெப். 05*

உலகெங்கும் கொரோனா வைரஸின் நான்காயிரம் வகையான திரிபுகள் உள்ளன. இவ்வாறான நிலையில்தான் பைசர் மற்றும் அஸ்ட்ராஜெனெகா உள்ளிட்ட அனைத்து தடுப்பூசி உற்பத்தியாளர்கள் தங்கள் தடுப்பூசிகளை மேம்படுத்த முயற்சிக்கின்றன என்று இங்கிலாந்தின் கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டத்தை கண் காணித்து வரும் அமைச்சர் நதிம் ஜஹாவி தெரிவித்துள்ளார்.



தொற்று நோயை ஏற்படுத்தும் கொரோனா வைரஸின் ஆயிரக்கணக்கான பிறழ்வுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் இங்கிலாந்து, தென்னாபிரிக்கா மற்றும் பிரேசிலிய வகைகள் என அழைக்கப்படுபவையும் அடங்கும்.

ஏனையவற்றை விட இங்கிலாந்து, தென்னாபிரிக்கா மற்றும் பிரேசிலிய பிறழ்வு வைரஸ்கள் விரைவாகப் பரவுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், புதிய பிறழ்வுகளால் தடுப்பூசிகள் செயலற்றுப் போகும் நிலை வெகு குறைவாகவே உள்ளது. பைசர், பயோஎன்டெக், மொடர்னா, ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராஜெனெகா மற்றும் பிற தடுப்பூசி நிறுவனங்கள் புதிய திரிபுகளை அவதானித்து அதற்கேப்ப தங்கள் தடுப்பூசிகளை மேம்படுத்த முயன்று வருகின்றன என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

## இந்தியாவிடம் 110 கோடி மருந்துகள் கொள்வனவு

### யுனிசெவ் அமைப்பு அறிவிப்பு

*ஜெனிவா, பெப். 05*

குறைந்த வருமானம் கொண்ட 100 நாடுகளுக்குத் தேவையான 110 கோடி கொரோனா தடுப்பு மருந்துகளை இந்தியாவிடம் யுனிசெவ் அமைப்பு கொள்வனவு செய்யவுள்ளது.

கொரோனா தடுப்பு மருந்து பற்றிய செய்தியாளர் சந்திப்பில் யுனிசெவ் அமைப்பின் தலைவர் ஹென்ரீட்டா போர் பேசும்போது, கொரோனா தடுப்பு மருந்துகளுக்காக இந்தியாவின் சீரம் அமைப்புடன் நீண்டகால விநியோக ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

இதன்படி, குறைவான மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட 100 நாடுகளுக்காக தலா 3 அமெரிக்க டொலர்கள் (ரூ.510) மதிப்பிலான 110 கோடி கொரோனா தடுப்பு மருந்துகளை யுனிசெவ் அமைப்பு கொள்வனவு செய்யும் என்றார். (ஐ)

## பேஸ்புக்கிற்கு தடை

*நைபிரௌவ், பெப். 05*

மியன்மரில் இணையதள சேவைகளுக்கு தற்காலிக தடை விதிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன்படி, மியன்மரில் அரசுக்கு சொந்தமான தொலைத் தொடர்பு எம்.பி.டி உட்பட இணையத்தள சேவை வழங்குநர்களால், பேஸ்புக் சேவைகள் தடை செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அந்நாட்டு தகவல் தொடர்பு அமைச்சகம், நாட்டின் ஸ்திரத்தன்மையை பேணுவதற்காக நாளை மறுதினம் வரை பேஸ்புக் தடை செய்யப்படும் என்று தெரிவித்திருந்தது.



## ஆங் சான் சூகிக்கு விளக்க மறியல்

*யங்கூன், பெப். 05*

அனுமதியின்றி தொடர்பாடல் சாதனங்களை கொள்வனவு செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஆங் சான் சூகியை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க அந்த நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மியன்மரின் ஆட்சியை அண்மையில் இராணுவம் கைப்பற்றியது. இதையடுத்து அந்நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி, ஜனாதிபதி வின் மைன்ட் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் பலரையும் இராணுவம் சிறை வைத்துள்ளது.

இந்நிலையில், ஆங் சான் சூகியின் வீட்டில் நடத்தப்பட்ட தேடுதலில் 10 வோக்கி டோக்கி கருவிகளும், வேறு சில தொடர்பாடல் சாதனங்களும் கைப்பற்றப்பட்டன.

இவற்றை அவர், உரிய அனுமதி பெறாமல் இறக்குமதி செய்துள்ளார் என்று, இராணுவ அதிகாரிகள் வழக்கு தொடர்ந்தனர்.

இது தொடர்பில் விசாரணை நடத்திய தகினாத்திரி நீதிமன்றம் எதிர்வரும் 15ஆம் திகதி வரை ஆங் சான் சூகியை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.



## செவ்வாய்க்கான கனவு பயணம்: மீண்டும் வெடித்தது றொக்கெட்!

*நியூயோர்க், பெப். 05*

"ஸ்பேஸ் எக்ஸ்" நிறுவனம் செவ்வாய் கிரகத்திற்கு மக்களை அழைத்து செல்ல வடிவமைத்த இரண்டாவது மாதிரி றொக்கெட்டும் வீழ்ந்து வெடித்து சிதறியது.

இதன் முதல் மாதிரி றொக்கெட் கடந்த டிசெம்பரில் ஏவப்பட்டது. ஆனால், அது திரும்பி வந்து வெடித்துச் சிதறியது.

இந்நிலையில் நேற்று முன்தினம் எஸ். என். 9 என்ற அதன் மறு பதிப்பு ரெக்ஸாஸில் இருந்து ஏவப்பட்டது. 10 கி.மீற்றர் வரை பயணித் இந்த றொக்கெட் சரிந்து பூமியுடன் மோதுண்டு வெடித்து சிதறியது. (ஐ)

# எழுவரின் விடுதலை தொடர்பில் ஆளுநரிடமிருந்து பதில் இல்லை

### தமிழ்நாடு முதலமைச்சர்



*சென்னை, பெப். 05*

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனைக் காலத்துக்கும் அதிகமாக சிறைவாசம் அனுபவிக்கும் எழுவர் விடுதலை தொடர்பில் தமிழக ஆளுநரிடம் இருந்து பதில் கிடைக்கவில்லை என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

பேரறிவாளன் உள்பட 7 பேரையும் விடுவிப்பது தொடர்பான விவகாரத்தில் தி.மு.க. தவறான தகவல்களை பரப்புகிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நேற்று இடம்பெற்றது. இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ராலின் எழுவர் விடுதலை குறித்து பேசினார். இதற்கு பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

7 பேரின் விடுதலை தொடர்பாக தமிழக ஆளுநரிடமிருந்து இதுவரை எந்த பதிலும் இல்லை. ஆனால்,

இந்த விவகாரத்தில் ஆளுநர் நல்ல முடிவை எடுப்பார் என்ற நம்பிக்கை உள்ளது என்று இதன்போது குறிப்பிட்டார்.

இதேவேளை, எழுவர் விடுதலை தொடர்பாக தமிழக ஆளுநரின் முடிவை அறிவிக்கும்படி இரு வார அவகாசத்தை நீதிமன்றம் வழங்கியது. இது தொடர்பில் அவர் இன்னமும் முடிவை அறிவிக்கவில்லை. இந்நிலையில், வரும் 9 ஆம் திகதி வழக்கு விசாரணைக்காக நீதிமன்றம் மீண்டும் கூடவுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் இன்று ஆரம்பம்



சென்னை, பெப். 05

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் டெஸ்ட் தொடர் இன்று சென்னையில் ஆரம்பமாகிறது.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. முதல் இரு டெஸ்ட்களும் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதற்காக இரு அணி வீரர்களும் கடும் பயிற்சியில் நேற்று ஈடுபட்டடன.

இன்று தொடங்கும் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெறவேண்டிய நிலையில் இரு அணிகளும் உள்ளன. ஏனெனில் இதில் வெல்லும் அணி சம்பியன்ஷிப் தொடரின் இறுதிக்கு முன்னேறுவதற்கு இலகுவாக இருக்கும்.

இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய தொடரில் இறுதி மூன்று போட்டிகளிலும் விளையாட இந்திய அணித் தலைவர் விராட் கோலி பங்கேற்கவுள்ளார்.

இதேவேளை, இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட் தனது நூறாவது டெஸ்ட் போட்டியில் களமிறங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# காலிறுதியில் ஹாலேப்

மெல்பர்ன், பெப். 05

கிப்ஸ்லண்ட் தெரபி ரென்னிஸ் தொடரில் சிமோனா ஹாலேப், நயோமி ஒசாகா ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறினர்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர், மெல்பர்னில் வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதற்கு தயாராகும் வகையில் மெல்பர்னில் கிப்ஸ்லண்ட் தெரபி ரென்னிஸ் நடக்கிறது. இதன் மூன்றாவது சுற்று ஆட்டம் நேற்று முன்தினம் இரவு நடந்தது. ருமேனியாவின் சிமோனா ஹாலேப் ஜேர்மனியின் சிகேமண்டை சந்தித்தார்.

இதில், 6-2, 6 -4 என்ற செற் கணக்கில் இலகுவாக வெற்றி பெற்ற ஹாலேப் காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில், ஜப்பானின் ஒசாகா, பிரிட்டனின் பௌல்டரை சந்தித்தார்.

முதல் செற்றை 3:6 என இழந்தார் ஒசாகா.

பின் சுதாரித்துக் கொண்ட இவர் அடுத்த இரு செற்களை யும் 6:3, 6:1 என வசப்படுத்தினார். முடிவில் ஒசாகா 3:6, 6:3, 6:1 என்ற கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறினார். (ஐ)

## மே.இ. தீவுகளுடனான டெஸ்ட்:

# பங்களாதேஷ் 430!

டாக்கா, பெப். 05

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்டில் முதல் இனிங்ஸில் 430 ஓட்டங்களைக் குவித்துள்ளது பங்களாதேஷ் அணி. மெஹிடி ஹசனின் கன்னிச் சதத்தின் உதவியாலேயே அந்த அணி இந்த இலக்கை எட்டியது.

பங்களாதேஷ் சென்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி அங்கு இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முன்னதாக 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரை பங்களாதேஷ் முழுமையாகக் கைப்பற்றியது.

இந்நிலையில், இரு அணிகளிடையேயான முதல் டெஸ்ட் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

முதல் நாளில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 242 ஓட்டங்களை பங்களாதேஷ் எடுத்திருந்தது. நேற்று இரண்டாம் நாளான நேற்று சகீப் அல் ஹசன் 39 ஓட்டங்களுடனும், லிற்றன் டாஸ் 34 ஓட்டங்களுடனும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

டாஸ் மேலதிகமாக 4 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து மெஹிடி ஹசன் களம் புகுந்தார்.

மேற்கிந்திய வீரர்களின் பந்துவீச்சை லாவகமாக எதிர்கொண்டார். இந்நிலையில், சகீப் அல்ஹசன் தனது 25ஆவது அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

தொடர்ந்து ஆடியது இந்த இணை. சகீப் அல்ஹசன் 68 ஓட்டங்களைப் பெற்றருந்தபோது கோர்னவோலின் பந்தில் வீழ்ந்தார்.

ஆனால், மறுபுறத்தில் அதிரடியாக ஆடிய மெஹிடி ஹசன் அரைச்சதம் கடந்து சதத்தை நோக்கி முன்னேறினார்.

அவருக்கு துணையாக நயீம் ஹசன் நின்றார். தனது கன்னிச் சதத்தைப் பூர்த்தி செய்த மெஹிடி ஹசன் 103 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். நயீம் ஹசன் 24 ஓட்டங்களைப் பெற்றார்.

150.2 ஓவர்களை மொத்தமாக எதிர்கொண்ட பங்களாதேஷ் அணி 430 ஓட்டங்களைக் குவித்தது.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்து வீச்சில் ஜொமல் வாரிகன் 4, கோர்ன்வோல் 2 விக்கெட்களையும் கெமர் ரோச், கப்ரியால், பொன்னர் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வருகிறது மேற்கிந்தியத் தீவுகள். அணித் தலைவர் பிராத்வைற், காம்ப்வெல் இணை தொடக்கம் கொடுத்தது.

ஜோன் காம்ப்வெல் 3 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். அடுத்து வந்த சய்னி மொசெலி 2 ஓட்டங்களே தாக்குப்பிடித்தார். நேற்றைய நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது, மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 விக்கெட்கள் இழப்புக்கு 75 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பிராத்வைற் 49 ஓட்டங்களுடனும், பொன்னர் 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பங்களாதேஷின் பந்துவீச்சில் முஸ்தபிர் ரஹ்மான் 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும். (ஐ)





# உலகக்கிண்ணத்தில் விளையாட வேண்டும்

ஜோ ரூட்

சென்னை, பெப். 05

இந்தியாவில் நடக்கும் இருபது - 20 உலகக்கிண்ணத் தொடரில், தான் விளையாட விரும்புகிறார் என்று இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவர் ஜோ ரூட் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி டெஸ்ட் அணிக்கு ஜோ ரூட்டை தலைவராக நியமித்துள்ளது. இதேபோல ஒருநாள், இருபது - 20 அணிகளின் தலைவராக மோர்கன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மூன்று வகையிலான கிரிக்கெட் போட்டியிலும், ஜோஸ் பட்லர், பென் ஸ்ரோக்ஸ், ஜாப்ரா ஆர்ச்சர் ஆகியோர் மட்டுமே இடம்பெற்றுள்ளனர். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபது - 20 தொடரில் ஜோ ரூட் அணிக்குள் உள்வாங்கப்படவில்லை.

இதனால், அவரின் இருபது -20 கிரிக்கெட் வாழ்க்கை அவ்வளவுதான் என்று கருதப்படுகின்றது. இந்நிலையிலேயே அவர், இருபது - 20 உலகக் கிண்ணத் தில் விளையாட விரும்புகிறார் என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில், "என்னை பொறுத்த வரை இங்கிலாந்து அணி உலகக்கிண்ணத் துக்கு வலுவான வீரர்களை கொண்ட அணியாக செல்ல வேண்டும் என்பது. முக்கியமானது. நானும் அணியில் இடம் பிடிப்பேன் என நம்புகிறேன்.

உண்மையிலேயே உலகக்கிண்ண அணியில் இடம் பிடிக்க விரும்புகிறேன். மூன்று வடிவிலான கிரிக்கெட்டிலும் விளையாட விரும்புகிறேன். எல்லாமே வித்தியாசமான சவால்கள். விரைவில் என்னை நிரூபிப்பேன். - என்றார்.

# வவுனியாவில் தடையை மீறி உண்ணாவிரதப் போராட்டம்











வவுனியா,பெப்.05

**நீதிமன்றத்தின் தடை உத்தரவையும் மீறி வவுனியாவில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுக்காலை 10 மணியளவில் ஆரம்பமானது.**

வவுனியாவில் சுதந்திர தினமான நேற்று அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் ஒன்றை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

அதற்கு வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தால் நீதிமன்றில் தடை உத்தரவு பெறப்பட்டதுடன் வவுனியா பொலிஸ் பிரதேசத்துக்குள் ஆர்ப்பாட்டம் எதனையும் நடத்தவேண்டாம் என்று உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

எனினும், நீதிமன்ற உத்தரவையும் மீறி அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

காலை 10 மணியளவில் பழைய பேருந்து நிலையப் பகுதிக்கு முன்பாக ஒன்றுகூடிய உறவுகள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்ததுடன் அதனைத் தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த போராட்டக்காரர்கள்: 'பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த நாள் என சிங்கள தேசம் குதூகலித்துக் கொண்டாட்டத்தில் மூழ்கியிருக்கிறது.

73 வருடங்களுக்கு முன்பு இதே நாளிலே எங்கள் தமிழ்த் தலைவர்களும் பிரிட்டிஷாரும் விட்ட பிழையால் தமிழினம் தொடர்ந்தும் சுதந்திரம் கிடைக்காத இனமாக அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறது.

எனவேதான் சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தை காலங்காலமாக கறுப்பு நாளாகவும் துக்கதினமாகவும் கடைப்பிடிக்கின்றோம்.

புனர்வாழ்வளிக்க ப்பட்டவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அங்கவீனர்கள், அரசியல் கைதிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பற்றி எதுவித அக்கறையும் காட்டவில்லை.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க எதுவித நடவடிக்கைகளும் எடுக்க முன்வரவில்லை. தமிழ் மக்கள் பாரபட்சமாக இனத்துவேசத்துடன் நடத்தப்படுவதையோ, இலங்கையிலே ஒரே குற்றத்துக்கு தமிழர்களுக்கு ஒரு நீதியும்சிங்களவர்களுக்கு வேறொரு நீதியும் என்று பகிரங்கமாகவே இனப் பாரபட்சம் காட்டப்படுவதையோ கண்டுகொள்ளவில்லை.

இதுவரை எங்களுடன் சேர்ந்து போராடிய 80 இற்கும் மேற்பட்ட தாய் தந்தையர் நீதி கிடைக்காமலேயே இறந்துவிட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் அவர்களது உறவுகள் தாமும் காணாமல் ஆக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்துடனேயே தொடர்ந்து போராடி வருகின்றனர்.

எமது போராட்டங்களும் உரிமைக்காக எழுப்பப்படும் எமது குரல்களும் நீதிமன்றத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு எமது குரல்வளை நசுக்கப்படுகின்றது"-என்றனர். (எ)

# தமிழின எழுச்சிப் பேரணியில் கட்சி பேதமின்றி அணிதிரள்க

## சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை

வவுனியா,பெப்.05

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான தமிழின எழுச்சிப் பேரணி இன்று முல்லைத்தீவு, வவுனியா, மன்னாரை வந்தடையவுள்ள நிலையில் கட்சி பேதங்களை மறந்து அனைவரும் அணிதிரண்டு வந்து ஆதரவு நல்குமாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச்செயலாளர் சிவசக்தி ஆனந்தன் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள புதிய பிரேரணை வலுவானதாக இருக்கும் அதேநேரம் பொறுப்புக்கூறல் விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரைப்பதற்கான செயல்பாடுகளும் முன்னெடுக்கப்படவேண்டும்.

வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள், அரசியல் கைதிகளின் உறவுகள் தமது அன்புக்குரியவர்களுக்காக போராட முடியாதவொரு சூழல் தற்போது எழுந்திருக்கின்றது. ஜனநாயக மறுதலிப்புக்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

படைத்தரப்புக்கள் இரும்புக்கரம் கொண்டு தமிழ் மக்களின் செயல்பாடுகளை ஒட்டுமொத்தமாக அடக்குவதற்கே முனைப்புக் காட்டுக்கின்றன.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான போராட்டப் பேரணி நேற்று முன்தினம் ஆரம்பமானபோது இந்தச் செயல்பாடுகள் அப்பட்டமாக முழு உலகிற்குமே வெளிப்பட்டுளளது. அதுமட்டுமன்றி போராட்டங்களில் பொதுமக்கள் இணைந்து கொள்வதற்கு கொரோனா சட்டங்களை வைத்து பொலிஸார் தடைகளை விதிக்கின்றனர்.

அடக்குமுறைகளையும், திட்டமிட்ட தடைகளையும் உடைத்தெறிந்து அனைவரும் போராட்டப் பேரணியில் கலந்துகொண்டு சர்வதேசத்துக்கு தமிழினத்தின் நியாயத்தை மீண்டும் ஒருதடவை பலமாகச் சொல்ல வேண்டும். அதற்காக இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுமக்கள், சிவில் அமைப்புக்கள், மதத்தலைவர்கள், தமிழ் தேசியப்பரப்பில் உள்ள அரசியல் கட்சிகள் உள்ளிட்ட அனைவரும் பேதங்களை மறந்து கலந்து கொள்ள வேண்டும் என்று பகிரங்க அழைப்பு விடுகின்றேன்- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# கௌதம புத்தரை துணைக்கு அழைத்து தன்னை நியாயப்படுத்துகிறார் ஜனாதிபதி

## மனோ கணேசன் சுட்டிக்காட்டு

கொழும்பு,பெப்.05

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதான், இலங்கையை அல்ல, சிங்கள - பௌத்த இராச்சியத்தையே கட்டியெழுப்ப புறப்பட்டுள்ளதாகத் தெளிவுபடக் கூறி விட்டார். இதற்காக அவர் கௌதம புத்தரையும் துணைக்கு அழைத்து, தன்னை நியாயப்படுத்தியுள்ளார் என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஜனாதிபதி கோட்டாபயவின் சுதந்திர தின உரையின் பிரதான சாராம்சத்தை கேட்டுப் பார்த்தால் இது தெளிவாகப் புரிகிறது. தேடிப்பார்த்ததில் அவரது சிந்தனையில் உள்ள நான்கு முத்தான விடயங்களை தனது உரையில் அவர் உதிர்த்துள்ளார் எனத் தெரிய வருகிறது.

நாம் பல இன, மொழி, மத மக்கள் சகவாழ்வு வாழும் சுபீட்சமான இலங்கை இராச்சியத்தை கட்டியெழுப்ப முயல்கின்றோம். ஜனாதிபதி, தான் இலங்கையை அல்ல, சிங்கள - பௌத்த இராச்சியத்தையே கட்டியெழுப்ப புறப்பட்டுள்ளதாகத் தெளிவுபடக் கூறிவிட்டார்.

உண்மையில் தனது இலக்கை, ஒளிவு மறைவு இல்லாமல் தெளிவாக, உள்ளதை உள்ளபடி கூறியமையையிட்டு நான் ஜனாதிபதியைப் பாராட்டுகின்றேன். அவரது இலக்கை நாம் ஏற்க மறுக்கின்றோம் என்பது வேறு விஷயம். ஆனால், அவர் ஒளிந்து விளையாடவில்லை அல்லவா?

உலகத்துக்கு ஜனாதிபதி ஏதோ சொல்ல வருகிறார், அது என்ன என குழப்பிக்கொள்ள வேண்டாம். அவர் பின்வரும் நான்கு கருத்துகளைத்தான் தெளிவாகக் கூறுகிறார்.



(01) நீங்கள் தேடிய தலைவன் நான்தான். (02) நான் ஒரு சிங்கள - பௌத்த தலைவன். இதை சொல்ல நான் ஒருபோதும் தயங்கப் போவதில்லை. (03) பௌத்த படிப்பினைகளின் அடிப்படைகளிலேயே நான் இந்நாட்டை ஆளுவேன். (04) நாட்டின் சட்ட வரையறைக்குள் எல்லா இன, மதத்தவருக்கும், சுதந்திரமும், சமத்துவமும் பெற்று சமாதான சகவாழ்வு வாழ பௌத்த தத்துவத்துக்குள்ளேயே உரிமையுண்டு- என்று சுட்டிக் காட்டியுள்ளார். (எ)

# இலங்கையின் சுதந்திர தினத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி வாழ்த்து

வொஷிங்டன்,பெப்.

இலங்கையின் 73ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்து - பசுபிக் பிராந்திய பாதுகாப்பு மற்றும் செழிப்பை மேம்படுத்துதல் தொடர்பில் இலங்கையுடன் ஒன்றிணைந்து ஒரு பங்காளராகவும் நண்பராகவும் பணியாற்ற எதிர்பார்ப்பதாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொற்றைத் தோற்கடிக்கவும் உலகப் பொருளாதார நிலையை வழமைக்குக் கொண்டு வருவதற்கும் எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ள அயராது ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)



# சுதந்திரக் கட்சியின் மாநாடு நேற்று யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், பெப். 05

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டப் பிரிவின் மாநாடு நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர முதன்மை அதிதியாகப் பங்கேற்றார்.

புதிதாக அமைக்கப்பட்ட நெடுந்தூர பேருந்து நிலையத்துக்கு அருகில் இருந்து விருந்தினர்கள் பேரணியாக அழைத்து வரப்பட்டனர். இதைத் தொடர்ந்து தேசியக் கொடியும், கட்சிக் கொடியும் ஏற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் பங்கேற்றனர். (ஐ-3)

# முஸ்லிம் மக்களே இன்று வவுனியாவில் திரளுங்கள்

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அழைப்பு

வவுனியா, பெப். 05

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடை பயண போராட்டம் இன்று வவுனியாவை வந்தடையவுள்ளது. இந்தப் போராட்டத்தில் முஸ்லிம் மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சி வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவித்தவை வருமாறு:

சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான அடக்குமுறைகளை எதிர்த்தும், கண்டித்தும், தமிழ் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் கட்சிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் போராட்டத்துக்கு தமது பூரண ஒத்துழைப்புகளை வழங்குமாறு வவுனியா மாவட்டத்தில் வசித்து வரும் அனைத்து முஸ்லிம் மக்களிடமும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கின்றது.

சிறுபான்மையினர் என்ற வகையிலும், முஸ்லிம் சமூகமும் இந்த அரசின் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் இனம் என்ற வகையிலும்.தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள இப் போராடத்தில் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நடை பயணப் போராட்டம் இன்று மதியம் 12 மணியளவில் வவுனியாவை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே குறித்த நேரத்தில் வவுனியா ஹொறவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள தினசந்தைக்கு முன்பாக அனைத்து முஸ்லிம் உறவுகளும் ஒன்று கூடுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் வவுனியா நகரசபை உறுப்பினர்களான அப்துல் பாரி மற்றும் முகமதுலறீப் ஆகியோர் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ)

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை மூடிமறைக்காதீர்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் கோரிக்கை

கொழும்பு, பெப். 05

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை மூடி மறைப்பதற்கு முயலவேண்டாம் கர்தினால் மல்கம் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

73 வது சுதந்திர தினத்தை குறிக்கும் வகையில் நேற்று இடம்பெற்ற ஆராதனை நிகழ்விலேயே கர்தினால் மல்கம் ரஞ்சித் இதனை தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழுவின் அறிக்கையை அரசாங்கம் பகிரங்கப்படுத்தும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

30வருட கால யுத்தத்திலிருந்து மீண்ட இலங்கை



நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் அபிவிருத்தி செய்து வருகின்றது என தெரிவித்துள்ள அவர் நாட்டில் மீண்டும் இன்னொரு மோதலை தூண்ட முயன்றவர்கள் யார் என்பதை வெளிப்படுத்தவேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளது என குறிப்பிட்டுள்ள மல்கம் ரஞ்சித் கடந்த காலத்தில் தலைவர்கள் ஆணைக் குழுக்களின் அறிக்கையை மறைத்தது போல இதனையும் மறைக்க வேண்டாம் என கோரியுள்ளார்.

# பொத்துவில் - பொலிகண்டி போராட்டம்: முஸ்லிம் மக்கள் பேராதரவு!

மட்டக்களப்பு, பெப். 05

**பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரையான நடை பவனி போராட்டத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் மக்கள் பெரும் ஆதரவை வழங்கினர்.**



இலங்கை அரசின் பேரினவாத போக்கைக் கண்டித்தும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை இனங்களின் உரிமைகளை வலியுறுத்தியும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரை போராட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவிலில் தொடங்கிய இந்தப் போராட்டம் மட்டக்களப்பு எல்லையில் முதல்நாள் முடிவடைந்தது. நேற்றைய தினம் போராட்டக்காரர்கள் காத்தான்குடியை வந்தடைந்தனர். காத்தான்குடி தெற்கு எல்லை நுழைவாயிலில் இருந்து காத்தான்குடி மக்கள் அவர்களை வரவேற்று வடக்கு எல்லை வரை பேரணியாக சென்றனர்.

இதன்போது, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஆதரவினை வழங்கியதுடன் முன்னணியின் உறுப்பினர்களும் பேரணியில் கலந்து கொண்டனர்.

இதேபோன்று காத்தான்குடி நகர சபை உறுப்பினர் மர்சூக் அகமட் லெவ்வை மற்றும் மட்டக்களப்பு மாநகர முன்னாள் உறுப்பினர் என்.கே.ரகுமான் உட்பட உள்ளூராட்சி மன்றங்களின் முஸ்லிம் உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள் பெருந்திரளான இளைஞர்கள், பொது மக்கள் என பலரும் காத்தான்குடி பேரணியில் இணைந்து கொண்டனர்.

காத்தான்குடி பிரதேசத்துக்கு பேரணி வந்தபோது பேரணியில் இடம்பெற்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், இரா. சாணக்கியன் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

'அரசாங்கமே ஜனாஸா எரிப்பை நிறுத்து", "சிறுபான்மை மக்களை அடக்காதே", 'அரசியல் கைதிகளை விடுதலை செய்", என்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அத்துடன் சிறுபான்மை மக்களின் உரிமைகளை நிலைநாட்டுமாறும் இதன் போது, போராட்டக்காரர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இந்த ஆர்பாட்டத்தின் போது காத்தான்குடியிலிருந்து கலந்து கொண்டோர் சுலோகங்களையும் பதாதைகளையும் தாங்கிச் சென்றனர்.

காத்தான்குடி முஸ்லிம் மக்கள் வடக்கு, கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்களும் தமது நடைபவணிக்கு ஆதரவு வழங்குவதையிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், மற்றும் இரா.சாணாக்கியன் உட்பட சிவில் சமூக பிரதி நிதிகள் தமது நன்றிகளையும் மகிழ்ச்சியையும் வெளியிட்டனர். (ஐ)

# காயத்துடன் பெண் சடலமாக மீட்பு

வவுனியா, பெப். 05

தலையில் பலத்த காயத்துடன் இளம் குடும்ப பெண்ணின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எருக்கலம் கல் பகுதியில் அவரின் வீட்டின் காணியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதே இடத்தை சேர்ந்த சிவகுமார் சித்திரகலா (வயது 36) என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பெண்ணின் கணவர் பொலிஸாருக்கு அளித்த தகவலின் பெயரில் அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர். அத்துடன் விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

# மணல் அகழ அனுமதி

கொழும்பு, பெப். 05

நிபந்தனைகளுடன் குறுகிய காலத்துக்கு மணல் அகழ்வு களுகங்கையில் அனுமத வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

களுகங்கையில் நார்த்துபான வரையான 14 கிலோமீற்றருக்கு மணல் அகழ்வதற்கு புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் தடை விதித்தது.

இந்நிலையில், அப்பகுதியில் மீண்டும் மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் கடல் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் மக்கள் குடிதண்ணீருக்கு சிரமப்பட்டு வருவது ஏற்கனவே அறிந்ததே. (ஐ)



# இரு சமூகங்களையும் இணைக்கும் பிள்ளையார் சுழியே போராட்டம்!

## முன்னாள் அமைச்சர் அமீர் அலி

மட்டக்களப்பு, பெப். 05

தமிழ், முஸ்லிம் என்ற இரு சமூகங்களையும் ஒன்றிணைக்கும் பிள்ளையார் சுழி தான் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி என முன்னாள் இராஜாங்க அமைச்சர் அமீர் அலி தெரிவித்தார்.

தமிழ் பேசும் மக்களுக்கான நீதி கோரிய பயணத்தில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் முஸ்லிம் சமூகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த பயணம் எதிர்காலத்தில் ஒற்றுமைப்பட்ட பயணமாக இருக்க வேண்டும் இந்தப் பயணத்தில் தமிழ்த் தலைவர்கள் மீது முஸ்லிம் தலைவர்கள் நம்பிக்கை வைக்க வேண்டிய காலகட்டம் வந்துள்ளது. என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

இரு சமூகங்களையும் ஒன்றிணைக்கும் பிள்ளையார் சுழி தான் இந்த நிகழ்ச்சி நிரல் எதிர்காலத்தில் சிறுபான்மை சமூகம் தமிழர்கள் முஸ்லிம்கள் என்று வேறுபடுத்தும் ஆட்சியாளர்களுக்கு துல்லியமாக பதில் சொல்ல வேண்டியுள்ளது. அருவருப்பாக இந்த வீதியில் இறங்கி போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளியவர்கள் ஆட்சியாளர்கள் அவர்களது சட்ட திட்டங்கள் காட்டு தர்பார்கள் என குறிப்பிட்டார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி கட்டுவதற்கு விடமாட்டார்களாம்!

## யாழில் சிறு குழு போராட்டம்: அமைச்சர் தயாசிறியும் பங்கேற்பு



யாழ்ப்பாணம், பெப்.05

**முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி கட்ட அனுமதிக்க மாட்டோம் என்று கூறி சிறு குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தது.**

பண்ணையிலிருநது யாழ்ப்பாணம் நகரம் வரை இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

தேசியக் கொடிகளை கைகளில் ஏந்தி 'ஒரே நாடு ஒரே சட்டம்', என்று முழங்கியவர்களுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளரும் அமைச்சருமான தயாசிறி ஜயசேகரவும் பங்கேற்றனர்.

போராட்டத்தில் பங்கேற்ற பலரும் தமிழில் பதாதைகளை ஏந்தியிருந்தாலும் தமிழில் கோஷம் எழுப்புவதற்கு பெரிதும் சிரமப்பட்டனர்.

இதன்போது, முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை அமைக்க விட மாட்டோம் என்று போராட்டக்காரர்கள் கூறினர்.

(ஐ)




# நீதி கோரி திருமலையில் தொடர் உண்ணாவிரதம்

திருகோணமலை, பெப். 05

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி திருகோணமலையில் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று காலை 7 மணிக்கு ஆரம்பமானது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்தப் போராட்டம், சுழற்சி முறையில் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது.

நாட்டின் 73ஆவது சுதந்திர தினமான நேற்று திருகோணமலை அலஸ் தோட்டம், இறை இரக்க திருத்தலம் முன்பாக இந்தப் போராட்டம் ஆரம்பமானது.

இதன்போது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்பட்ட நாட்டில் சுதந்திர தின கொண்டாட்டம் எதற்கு என்று கேள்வி எழுப்பினார்கள்.

நாட்டின் பெரும்பான்மை இனத்தவருக்கு ஒரு சட்டமும் சிறுபான்மையினருக்கு ஒரு சட்டமும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் காணாமல் போன தங்களுடைய உறவினர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் இதன்போது அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் 20இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

(ஐ)

# சீன தடுப்பூசிக்கு அனுமதி பெற அரச மருந்தகம் முயற்சி

கொழும்பு, பெப். 05

சீனாவின் கொரோனா தடுப்பூசியை பயன்படுத்துவதற்கான அவசர அனுமதியை பெறுவதற்கான முயற்சிகளில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது.

சீனாவின் மருந்திற்கான அனுமதியை பெறுவதற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவிடம் உரிய ஆவணங்களை தேசிய மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் சமர்ப்பிக்கவுள்ளது.

பலமருந்துகள் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதாகவும் தேசிய மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதுவரையில் கொவிசீல்ட் அஸ்ட்ராஜெனேகா மருந்துகளிற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தேசிய மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

8 ஆம் திகதி ரஷ்ய மருந்திற்கு அனுமதியை பெறுவதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன, பாராத்பயோடெக்கின் மருந்துகளிற்கான ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றார்.

இரண்டு மாதங்களில் 90 இலட்சம் மக்களுக்கு மருந்துகளை வழங்குவதற்கான மருந்துகளை பெற முயல்கிறோம் இது குறித்து இந்தியாவின் சீரம் நிறுவனத்திற்கு அறிவித்துள்ளோம். 15ஆம் திகதி இரண்டாவது தொகுதி மருந்துகள் வரவுள்ளன எனவும் அவர் கூறினார்.

# மரண அறிவித்தல்

## சுந்தரராசா சீவரத்தினம் (சந்திரன்)



பிறப்பு: 18.08.1941
இறப்பு: 27.01.2021

நெடுந்தீவை பிறப்பிடமாகவும் இல.91/1, சிவநகர், உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரராசா சீவரத்தினம் (சந்திரன்) அவர்கள் நேற்று (03.02.2021) புதன் கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரராசா நாகமுத்து தம்பதியரின் புதல்வரும், திருமதி. கீதபொன்கலன், நாகம்மா, திருமதி ஏகாம்பரம், கனகரத்தினம் ஆகியோரின் பெறாமகனும், பழனி, யோகாம்பிகை தம்பதியரின் மருமகனும், நீலாம்பாள் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சாருகா, பிரியங்கா, ஜதார்த்தன், திவ்வியா ஆகியோரின் அன்புத் தந்தையும், சரஸ்வதி, இராசரத்தினம் (லயன்ஸ் கழகம் - கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமலிங்கம், நடராசலிங்கம், தனலட்சுமி (நெடுந்தீவு), திவ்வியலட்சுமி (முழங்காவில்), புஸ்பலட்சுமி (கொலண்ட்), யோகலட்சுமி (இராமநாதபுரம்), புஸ்பவதி (உதயநகர்), சண்முகம் (உருத்திரபுரம்) ஆகியோரின் மைத்துனரும் செந்தில் நாயகி, கலைமகள், பரராசசிங்கம், ஆனந்தராசா, நகுலேஸ்வரன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.02.2021) வியாழக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உருத்திரபுரம் பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
இல.91/1, சிவநகர், உருத்திரபுரம்.
தொ.பே.இல: 0769410566, 0772881005



# 'சயிட்டம்' நிறுவுநர் மருத்துவர் நெவில் தொற்றால் மரணம்

கொழும்பு, பெப். 05

நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலை மற்றும் தொழில்நுட்பம் மற்றும் மருத்துவத்திற்கான தெற்காசிய நிறுவனம் (SAITM) ஆகியவற்றின் நிறுவுநர் மருத்துவர் நெவில் பெர்னாண்டோ (வயது-89) கொரோனா தொற்றால் நேற்று உயிரிழந்தார்.

ஆரம்பத்தில் அவர் அவரது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார். பின்னர் அங்கொடை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலைக்கு (ஐ.டி.எச்) மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று மாலை உயிரிழந்தார்.

இலங்கையில் கொவிட் -19 நோயால் இரண்டாவது மருத்துவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| 13046 \| வே \|1987<br>காரைநகர் \| இந்து \|<br>Office Assistant \| Sri lanka \|<br>ஆய்யிலியம்(கடகம்) \| 168செ.மீ | 13557 \| கு \|1991<br>மானிப்பாய் \|Sri Lanka<br>இந்து \| Pharmacist \| செவ் : 02<br>பூராடம்(தனுசு) \| 165செ.மீ |
| 13025 \|வே \|1988<br>வட்டுக்கோட்டை \| இந்து \|<br>Staff \| Singapore \|<br>சித்திரை(துலாம்) \|174செ.மீ | 12968 \| வே \|1991<br>வட்டுக்கோட்டை \| இந்து \|<br>Sri Lanka \| Beautician \|<br>திருவாதிரை (மிதுனம்) \|160செ.மீ |
| 13888 \| வே \|1988<br>புங்குடுதீவு \| இந்து \|<br>Own Business \|Sri Lanka<br>அவிட்டம் (கும்பம்) \|170செ.மீ | 13773 \| வே \|1991<br>யாழ்நகரம் \| இந்து \| சு. செவ் : 03<br>N/A \| Sri Lanka \|<br>சுவாதி(துலாம்) \|165செ.மீ |
| 13267 \|வே \|1988<br>கோப்பாய் \| இந்து \|செவ் : 04<br>Quantity Surveyor \|Sri lanka<br>உத்தராடம்(மகரம்) \|175 செ.மீ | 16649 \|வி \|1977<br>ஏராளை \| இந்து \| செவ் : 08<br>UK \|Cashier at Restaurant<br>180செ.மீ \|ரேவதி(மீனம்) |
| 13554 \| கு \|1988<br>மானிப்பாய் \| இந்து \|174செ.மீ<br>Mechanical Engineer<br>Sri Lanka \|விசாகம்(துலாம்)<br>செவ் : 04 | 12965 \| கு \|1991<br>யாழ்நகரம் \| இந்து<br>N/A \|Sri lanka \| 165செ.மீ<br>பூரட்டாதி(கும்பம்) \|செவ் : 12 |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.02.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி ச.லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதி

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - நேரலை



5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10

**இரவு**

7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - முன்பள்ளி



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**

7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி TV CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் தமிழ்

**இரவு**

7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு
மாதிரி வினாத்தாள் ஆங்கிலம்

## ஐ ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : யாழ்ப்பாணம் இணுவில் கந்தசுவாமி கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : நயினாதீவு பத்திரகாளி அம்பாள் வீரபத்திரர் ஆலயம் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் இணுவில் கந்தசுவாமி கோவில் திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : ஆலயப் பாடல்கள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்